REGD 4642 M.

சந்தா விபரம்
—
1 ஆண்டு ரூ 7.
½ ,, 3 8 0

# திராவிடநாடு

16 பக்கம்
விலை
இரண்டணா

இலங்கை 15 சதம் மலாய்நாடு 12 காசு

மலர் 8 | 16-4-50 | இதழ் 42



★

# ★ 'மோகினியின்' சூதுமதி ★

★

"மனிதாபிமானம் எங்களை இம்முடிவுக்கு வரச் செய்தது—மக்கள் பசியால் துடிப்பதைக் கேட்டுப் பேசாது கிடக்க நாங்கள் மரக்கட்டைகளா?—இல்லையே! எனவேதான் பஞ்சம் நீக்கும் பரோபகாரமான இந்தக் காரியத்தைச்செய்ய யோசனை செய்து கொண்டிருக்கிறோம்" என்று அண்மையில் அமெரிக்க ராஜாங்க மந்திரி ஆகிஸன் வெளியிட்டிருக்கிறார்.

பட்டினியால் துடித்துச் சாகிறார்கள்—எனவே அவர்கள் துயர் போக்க எங்களிடம் மலிந்து கிடக்கும் கோதுமை முதலிய உணவுப் பொருள்களை அனுப்பப்போகிறோம், அதுபற்றி யோசனை செய்து கொண்டுள்ளோம் என்று அறிவிக்கிறார். மனிதாபிமானம் — இக்காரியம் பற்றித் தூண்டியதாம், சொல்லுகிறார் அவர்.

* X *

"ரொம்ப மோசமான ஆளப்பா அவர்! கெஞ்சினேன், பாருங்கள் என் குழந்தைகளையென்று சொன்னேன் — கொஞ்சங்கூட மனமிளகவில்லை! போடா போக்கத்தவனே—பெட்டியில் எங்கேடா பணமிருக்கிறது உங்களுக்கெல்லாம் கொட்டியழ! இருந்தாலும், ஏனடா நான் தரவேண்டும்—என்று இரக்கமில்லாமல் பேசின ஆளப்பா! அந்த சுடுமூஞ்சியைத் தர்மதாதா என்று சொல்கிறாயே!"

வேதனைப்பட்டவன் இப்படிக் கூறினான், கோடிவீட்டுப்பண்ணைக்காரர் குறித்து. கேட்டவனுக்குச் சந்தேகம்—இப்போதுதான் பண்ணைக்காரர் கோடீசுவரப் பிள்ளை வீட்டிலிருந்து அவன் திரும்பினான்.

"பக்கத்தூரார், பதைத்துச் சாகிறார்களாமே சாப்பாடு இல்லாமல்! சேச்சே, எவ்வளவு பரிதாபமான செய்தி—இதைக் கேட்டுச் சும்மாயிருந்தால் நானென்ன மனிதனா? ஓய்! கணக்கப்பிள்ளை, அடுக்கிவைத்திருக்கும் நெல் மூட்டைகளில் ஐம்பதைக் கொடுக்கலாமா என்று யோசனை செய்யும்! சீக்கிரம்!" என்று, அவர் சத்தம் போட்டுக் கூறிக்கொண்டிருந்ததைக் கேட்டுவிட்டு வந்தவன் அவன். எனவே, நண்பன் 'ஆரம்பித்த தோரணை'யைக் கண்டு மயங்கினான். அவனென்ன கண்டான், கோடீசுவரர் ஏன், தர்ம தயாளுபோல பேசுகிறார் என்பதை!

X X X

"மனிதாபிமானம் இல்லையா எங்களுக்கு — நாங்கள் மட்டுமென்ன ஆகாயத்திலிருந்து குதித்தவர்களா—மனிதர்கள் தானே! மக்கள் படும் கஷ்டமும் வேதனையும் அவதியும் காண எங்கள் இதயம் எவ்வளவு துடிக்கிறது தெரியுமா" என்று பீடிகை போட்டுவிட்டு, அமெரிக்க அரசாங்க மந்திரி, ஆகிஸன், உணவுப் பொருள்களை அனுப்ப யோசனை செய்துகொண்டுள்ளோம்—என்று அறிவிக்கிறார்!

உணவுப் பொருள்களை அனுப்ப யோசனை செய்துகொண்டிருப்பதாக அவர் கூறும் நாடு எது தெரியுமோ—சீனா! கம்யூனிஸ்டுகள் வசமாகி, மா-சே-துங் தலைமையில நடந்து செல்லும் செஞ்சீனாவுக்கு உதவி செய்யப்போவதாகத் தகவல் கூறுகிறார்.

மனிதாபிமானம் — சிவப்பாகி விட்ட சீனாவில் நிலவும் பஞ்சநிலையைப் போக்கத் தங்களை இந்த உதவியைச் செய்யும் யோசனையைத் தூண்டுகிறதாம்! மனிதாபிமானம்!—எதிரிபோலக் கருதும் ஒருநாட்டின் மீது பிறந்திருக்கிறது, அமெரிக்காவுக்கு!

X X X

கோடீசுவரரிடம் போய் நின்று மூக்குடைபட்ட ஏழைக்கு, தனது நண்பன் அவருடைய தயாள குணம் பற்றிப் பேசியதும்—சிரிப்பு வந்தது! அவர் எப்பேற்பட்ட ஆள் தெரியுமோ என்று. சொந்த அனுபவத்தைக் கூறினான்! ஏழையின் சொந்த அனுபவம்—கோடீசுவரர் கணக்கப் பிள்ளையிடம் கூறிய வார்த்தைகள் இரண்டையும் குறித்து யோசனையில் ஆழ்ந்தான், நண்பன்.

இந்த நண்பனின் மயக்க நிலை, ஆகிஸன் தகவலைக் காணும் பலருக்கு ஏற்படவே செய்யும்.

"அமெரிக்காவைஎப்போதுபார்த்தாலும் ஏசிக்கொண்டேயிருக்கிறீர்களே-இப்போதுபார்த்தாயா-உதவி செய்ய யோசனை செய்துகொண்டிருக்கிறது. அதுவும் யாருக்கு? தனக்குப் பிடிக்காத கம்யூனிஸ்டு சீனாவுக்கு. ஏன் தெரியுமோ, சீன மக்களின் வேதனைப் பொறுக்காத மனிதாபிமானத்தால் இம்மகத்தான உதவியைச் செய்யப் போகிறது!" இதுபோன்ற பேச்சுகள் எழும்பும்.

செஞ்சீனா — அமெரிக்காவுக்குப் பிடிக்காத நாடு! எனினும் அங்கு உணவுப்பொருள்களை அனுப்ப யோசனை செய்து கொண்டிருக்கிறது, அமெரிக்கா!

புலிக்குப் பசுவின்மீது அன்பு பிறக்கிறது—ஆச்சரியகரமான சம்பவம். செஞ்சீனா—பஞ்சத்தால் புயலில் சிக்கிய படகு போலத் திண்டாடிக் கொண்டிருப்பதாகச் செய்திகள் தரப்பட்டது — முதலாளித்துவ செய்தி நிலையங்களால்!

இப்போது, அல்லலுறும் சீனாவுக்கு கோதுமையும் உணவுத் தானியங்களும் உதவப் போவதாக அமெரிக்க சர்க்கார் அறிவிக்கிறது. "உதவுங்கள் — உதவி செய்யாவிட்டால் உயிர்போய்விடும்!" என்று செஞ்சீனா வேண்டுகோள் விடுக்கவில்லை. எனினும் தானாகவே இத்தகவலைத் தருகிறது அமெரிக்கா—மனிதாபிமானம் என்ற போர்வையோடு!

இந்தியா மண்டியிட்டது, பிரதமர் நேரு, நேராகச் சென்றுவந்தார், வேண்டுகோள் — ஒருமுறையல்ல, பன்முறை விடுக்கப்பட்டது, "உணவுப்பொருள் இல்லாமல் திண்டாடுகிறோம் வறுமை வாட்டுகிறது. உங்களிடம் மலிந்துகிடக்கும் கோதுமையைத் தாருங்கள் — இனமாகவல்ல! குறைந்த விலைக்குத் தாருங்கள்" என்று கெஞ்சியது. ஆனால், கோரிக்கை வீணாயிற்று, குறைந்த விலைக்கு கொடுப்பதற்கில்லையென்று அமெரிக்கா மறுத்து விட்டது.

இந்தியாவின் கோரிக்கையைக் கண்டபொழுது எழும்பாத மனிதாபிமானம்— இப்போது உதயமாகியிருக்கிறது. தானாகவே தகவல் தருகிறார், செஞ்சினாவுக்கு உணவுப்பொருள்களை உதவத் தாங்கள் யோசனை செய்துகொண்டிருப்பதாக!

கெஞ்சிக் கேட்ட இந்தியாவுக்கு கோதுமையைக் குறைந்தவிலைக்குத் தர மறுத்த அமெரிக்கா, இப்போது தானாகவே உதவிசெய்கிறேன் என்று சினாவுக்கு அறிவிக்கிறது.

இந்தியா—அமெரிக்காவின் அத்யந்த நண்பன்!

செஞ்சினா—ரஷ்யப் பார்வைக்கு ஆட்பட்ட நாடு!

நண்பன் கோரிக்கைக்குக் கைவிரித்த அமெரிக்கா 'விரோதி' யெனக் கருதும் செஞ்சினாவுக்கு உதவிசெய்கிறேன் என்று கூறுகிறது. விசித்திரமான காட்சி—ஆனால் சூட்சமம் நிறைந்த ஒன்று.

X X X

'முதலாளித்துவம் — ஆள் மயக்கும் மோகினி' யென்று நாம் அடிக்கடிச் சொல்லி வருகிறோம்.

"தையலே, உன்மீது நான் கொண்ட மையலே—என்னை மாய்க்குதே,சாய்க்குதே!" என்றுதன்வசப்பட்ட நாடுகள் கெஞ்சினால் மிஞ்சும்! மிரட்டும்!

அழகைக்காட்டி அழைக்கும் சிலந்தி, தன் வலைக்குள் வீழ்ந்த ஈயை வீழ்த்திவிடுவதுபோல 'உதவி செய்கிறேன்' என்று கூறி, தன் கூடாரத்துக்குள் இழுத்துப்போடும். 'ஆள் மயங்கிவிட்டான்' என்றுதெரிந்ததும் அலட்சியத்தையே பதிலாகத்தரும். பிற்பட்டநாடுகளுக்கு உதவி,வறுமையால் வாடும் தேசங்களுக்குப் பண உதவி, என்று கூறி 'மார்ஷல் திட்டம்' வகுத்து பலநாடுகளைத் தன் கூடாரத்துக்குள் வீழ்த்தியிருக்கிறது அமெரிக்கா.

வசதியில்லையே, நாட்டின் நிலைமைகளைச் சமாளிக்க வழியில்லையே என்று ஏங்கிய பலநாடுகள் மார்ஷல் திட்டப்படி உதவி பெற்று வருகின்றன.

மார்ஷல் திட்டத்தை பிறநாடுகள் ஏற்றுக்கொள்ளும்வரை அமெரிக்கா காட்டிய அன்பும், வீசிய மோகனப் பார்வையும் ஏராளம். ஆனால், இன்றோ, உதவிபெறும் அந்நாடுகளை விரல்காட்டி நடுங்க வைக்கிறது.

கிரீஸ்—மார்ஷல் திட்டப்படி உதவி பெறும் நாடுகளில் ஒன்று. அந்நாட்டின் அரசாங்கத்தை அண்மையில் எச்சரித்திருக்கிறார் அங்கு அமெரிக்காவின் அரசியல் தூதராகயிருக்கும் கிரேடி—தனது சர்க்கார் சார்பில்! "உங்கள் போக்கு பிடிக்கவில்லை,வலிவுள்ள சர்க்காரை நீங்கள்ஏற்படுத்தியாகவேண்டும். இல்லையேல் உங்களுக்குத் தரப்பட்டுவரும் உதவி நிறுத்தப்பட்டுவிடும்" என்று தாக்கீது அனுப்பியுள்ளார்.

கிரீஸ்— கடந்தபோரில் சிக்கிச் சிதைந்த நாடுகளில் ஒன்று. எனவே அமெரிக்காவின் உதவியை நாடி, உயிர்வாழும் பிரச்னைகளைச் சமாளித்து வருகிறது. விவசாயம், தொழில் முன்னேற்றம் முதலியவைகளுக்குத்தேவையான மின்சாரத்தை உற்பத்தி செய்யும்—புதுத் திட்டங்கள் போடப்பட்டு அவைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இன்னும் முடியவில்லை — இத்திட்டங்கள் அமெரிக்க உதவியைக் கொண்டே நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

அமெரிக்காவின் உதவி நின்றுவிட்டால், இத்திட்டங்கள் பாழாகிவிடும் — பலனற்றவையாகி விடும். எனினும் எச்சரிக்கிறது அமெரிக்கா, "நிறுத்திவிடுவோம்" என்பதாக! அதேபோல தென் கொரியாவுக்கும் அண்மையில் அமெரிக்கா ஒரு எச்சரிக்கை விடுத்திருக்கிறது. ஆகிஸன் நேரடியாக அறிவித்திருக்கிறார், தென்கொரிய சர்க்காரின் போக்கு பிடிக்கவில்லை. இந்நிலை இன்னும் நீடிக்குமேயானால் இனிமேற்கொண்டு உதவி செய்ய முடியாது" என்று.

தென்கொரியாவும், போரால் சிதைந்த நாடுகளில் ஒன்று—போர் முடிந்தகாலமுதல் அமெரிக்காவின் அனுசரணையிலேயே இருப்பது. எனினும் இப்போது மிரட்டல் தாக்கீது அனுப்பியிருக்கிறது, அமெரிக்கா.

பாகுமொழிபேசி வலையில் வீழ்த்தும் சாகசமோகினிதான் அமெரிக்கா! அதுசிரித்துமடக்கிப்பின் சித்திரவதை செய்யும் என்றுநாம் அப்போதிருந்து கூறி வருகிறோம்.

மார்ஷல் உதவி, பிற்போக்கு நாடுகளுக்குக் கடன் என்று கூறி அமெரிக்கா பிரகடனங்கள் வெளியிட்ட போதிலிருந்து கூறிவருகிறோம், "காசூரார் — ஏழையூராரை" அடிமையாக்கும் தந்திரப்பேச்சு என்பதாக! வளர்ந்துவரும் கம்யூனிசத்தை ரஷ்ய ஆதிக்கத்தை-முதலாளித்துவ முன்னேடும் பிள்ளையான அமெரிக்கா, எதிர்க்க வகுக்கும் முன்னணித்திட்டங்களே—இவைகள் என்று நாம் கூறியபோது பலருக்குக் கேலியாகத்தோன்றியது.

அமெரிக்கா ஆபத்பாந்தவனாக நடிக்கும் — அத்தனையும் விஷம். வலை வைத்து நம்மைப்பிடிக்கும் தந்திரம். உதட்டில் அன்பும் உள்ளத்தில் சூதும், அமெரிக்காவின் நடவடிக்கைகள்! ஏமாறக்கூடாது, அதன் ஆசைமொழிகளைக் கேட்டு; சிறிது அயர்ந்தால்போதும்,அதன் ஆதிபத்தியத்துக்கு ஆட்படவேண்டியதுதான், என்று நாம் நேருவின் அமெரிக்கா விஜயத்தின்போதும் இந்திய சர்க்கார், உதவி கோரி அமெரிக்காவை நோக்கும் வேளைகளிலும் விளக்கி வந்திருக்கிறோம். நமது விளக்கம் இங்குள்ள பலருக்கு வேதனையாக இருந்தது. 'விஷயமறியாதவர்கள்' என்ற கேலிச்சொல்லை நம் மீது வீசினர்! கிண்டலுக்கும் கண்டனத்துக்கும் ஆளானோம். ஆனால் இன்று.........

வேண்டுகோள் விடுத்த இந்தியாவுக்கு கோதுமைதர அமெரிக்கா மறுத்தது.

உதவி பெற்றுவந்த நாடுகளின் சர்க்காரை மிரட்டுகிறது.

ஒவ்வொரு நாட்டிற்கும் உதவி கொடுப்பது, பின்தான் எண்ணியபடி அவைகளை ஆட்டி வைப்பது, ரஷ்யாவுக்கு எதிராக, வலிவுள்ள கூட்டு முன்னணியைத் தயார் செய்வது

என்றத்திட்டத்தின் ஏற்பாடுகள்தான் பிற்போக்குநாடுகளுக்குஉதவி, மார்ஷல் திட்டம், கடன் தருகிறோம் என்ற பேச்சு முதலியவை.

இதைக்குறிப்பிட்டுத்தான், நாம் எச்சரிக்கையும் எதிர்ப்பும் எழுப்பியது, இந்திய சர்க்கார் அமெரிக்காவுடன் பேரம் பேசியபொழுதெல்லாம். நட்புரிமை பேசி நண்பன் என்று நினைத்து நடக்கும் இந்தியா கேட்ட 'கோதுமை'யை மறுத்த அமெரிக்கா, இன்று சிவப்பாகிவிட்ட சீனாவுக்கு உணவுப்பொருள் அனுப்ப முன் வருகிறது—'மனிதாபிமானம்' என்று கூறிக்கொண்டு!

X X X

மிரட்டினார்! 'என்ன தைரியம் உங்களுக்கு அவனைப்போய் அழைத்தீர்களோ, தலைமைதாங்க — எவ்வளவு துணிச்சல்! என்னைவிட அவன் அவ்வளவு நல்லவனாகிவிட்டானோ—பார்க்கிறேன் ஒருகை' என்று பதைபதைத்தார், பக்கத்தூரார், தன்னைப்புறக்கணித்து, இன்னொருவரை அழைத்து மரியாதை செய்வதைக் கண்ட ஜமீன்தார் கோடீசுவரர்!

ஜமீனின் அட்டகாசம் விரும்பாத, பக்கத்தூரார், பாசமும் நேசமும் கொண்ட ஒருவரைத் தங்கள் நண்பனாகக் கொண்டனர்! தனது அட்டகாசம், அதட்டலுக்கு ஆட்பட்டுக்கிடக்கவேண்டியவர்கள் 'இன்னொருவன்' அன்புக்குத்தலைவணங்குவது கண்டு அவருக்குத் தாங்க முடியவில்லை. மிரட்டிப் பார்த்தார், நயமான சொல், பயமானபேச்சு 'என்னசெய்துவிடுவேன் தெரியுமா?' என்ற பயமுறுத்தல் எதுவும் பயனளிக்கவில்லை—பக்கத்தூரார், ஜமீன்தாரை சட்டை செய்யவில்லை! தங்கள் வேலையைச் செய்துகொண்டிருந்தனர் — இதைக்கண்ட ஜமீன்தார் திட்டம் தீட்டலானார். மிரட்டல் பயன்தராது என்று விளங்கியதும், முறை மாறியது! அன்பான பேச்சு, குழைவான சொல்வீச்சு அவருடைய இதயத்திலிருந்து வெளிவரத் துவங்கியது......

'அடடா! ரொம்பக் கஷ்டப்படுகிறார்களாமே பக்கத்தூரார்—கேள்விப்பட்டதிருந்து மனம் ரொம்ப சங்கடப்படுகிறதய்யா......என்ன தானிருக்கட்டும், மனிதாபிமானம் எல்லோருக்கும் பொதுவானதுதானே! 'நமக்கேன் தொந்திரவு--எக்கேடாவது கேட்டுப் போகட்டும் — என்று ஒரு சமயம் நினைப்புவரும். இருந்தாலும் மனசு கேட்கமாட்டேங்குது...... உதவி செய்யவேண்டும் என்று தோணுது!" என்று ஏழை பங்காளராக, தயாளகுண சீலராக வருவோர் போவோரிடம் பேச ஆரம்பித்தார், யாராவது வந்தால் அந்த நேரமாகப் பார்த்து கணக்கப்பிள்ளைக்கு உத்திரவு போடலானார். அதட்டுவதைவிட அன்பால் அவர்களை வளைத்துக் கொள்வதே சரியானயோசனை யென்று திட்டம் தீட்டினார். அன்புப்பேச்சு — பக்கத்தூரார் வியவகாரங்களில் பின்னர் கொஞ்சங் கொஞ்சமாகத் தலையிடுவது—அப்புறம் சந்தர்ப்பம் வந்ததும் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டுவது என்று திட்டங்கள் தயாராயின!

X X X

விஷயம் உணர்ந்த பக்கத்தூராரிடம் பணம் பெருத்த ஜமீன்தாரின் திட்டம் பலிக்குமா என்று கேட்காதீர்கள்.

பலிக்குமோ, என்னமோ, பாவம் அமெரிக்காவுக்கு இப்போது அந்த ஆசை உருவாகியிருக்கிறது! அதன்விளைவுதான்' மனிதாபிமானத்தால் உதவி செய்ய முன்வருகிறேன் என்பது!

தன் வலையில் வீழ்ந்துவிட்டவர்களை ஆட்டிப்படைக்கும் புத்தி படைத்த அமெரிக்கா, சீனாவுக்கு வலுவில் அழைப்பு விடுகிறது.

அழைப்பில் அன்பு இல்லை; சூதுமதி தென்படுகிறது. கம்யூனிஸ்டுகள் வசமான நாட்டில் பஞ்சம் எனக் கேள்விப்பட்டதும் 'உதவி செய்கிறோம்' என்று ஓடிவரும் அமெரிக்கா, அழைப்பை விடுத்திருப்பது சீனக் கம்யூனிஸ்டுச் சர்க்காருக்கு அல்ல; பொதுவாக, அதுவும் யோசனை செய்துகொண்டிருப்பதாக!

உலகோர், தனது மனிதாபிமானத்தை உணரவேண்டும்—அமெரிக்கா உதவ முன் வந்தது. ஆனால் நமது சர்க்கார்தான் மறுத்துவிட்டது என்ற எண்ணம் சீனமக்களிடையே எழும்பவேண்டும் என்ற எண்ணத்தின் மீதுதான் ஆகிஸன் இந்தத் தகவலைத் தந்திருக்கிறார்.

தந்திரப் புத்தியுடன் வெளியிட்டிருக்கும் இத்தகவலில் அமெரிக்க முதலாளித்துவத்தின் சூதுமதி வெளியாகிறதேயொழிய "மனிதாபிமானம்" தென்படவில்லை! தன்னை நாடியோரை அடிமையாக்கி, தன்னை விரும்பாதவரை மயக்கும் சாகசப் புத்தி வெளியாகிறதே யொழிய சாமர்த்தியத் தன்மை தென்படவில்லை!

சாமர்த்தியப் பேச்சு, தந்திர சாகசம் ஆகியவைகளின் மூலம் 'ஆள் மயக்கி'யாக யிருக்க அமெரிக்க முதலாளித்துவம் திட்டங்கள் தயாரிக்கலாம், ஆனால், அதை மக்கள் ஏற்றுக் கொள்வார்களா என்பதுதான் கேள்வி.

தென்கொரியா — அமெரிக்காவின் ஆதிபத்தியத்திலிருக்கும் நாடு எனினும் அமெரிக்கா எச்சரிக்கை விடுத்திருக்கிறது என்ற தகவலை தென்கொரியச் சட்டசபையில் அறிவிக்கப்பட்டபோது, சபையின் உபதலைவர் சீறியிருக்கிறார். "தென் கொரியா சுதந்திரமான நாடு. இதன் போக்கில் தலையிடவோ அல்லது எச்சரிக்கை விடுக்கவோ யாருக்கும் உரிமையில்லை" என்று ஆத்திரமாக எழுந்து முழக்கமிட்டுள்ளார்.

எனவே முதலில் நன்மைகள் செய்கிறேன் என்று நட்பு கொள்வதும், பின்னர் நயவஞ்சகத்துடன் நடப்பதும் பலிக்காது—முதலாளித்துவ மோகனப் பேச்சு, சூது கலந்தது என்பது என்றாவது வெளியாகித்தான் தீரும்.

'மனிதாபிமானம்' பேசி, செஞ்சீனாவுக்கு உதவப் போகிறேன் என்று அமெரிக்கா செய்திகள் மூலம், பிரச்சாரபீரங்கி (செய்தி ஸ்தாபனம்) கையிலிருப்பதால்முழக்கிவிட்டுப்பின் "நானென்னசெய்வேன். வலுவில் உதவப் போவதாகக் கூடச்சொன்னேன். ஆனால் அவர்கள்தான் சீனக் கம்யூனிஸ்டுச் சர்க்கார்தான் மறுத்துவிட்டது" என்று பழி போடலாம் என்ற தந்திரப் புத்தியுடன் இத் தகவலை வெளியிட்டிருக்கிறது.

இத்தந்திரப் பேச்சு முதலாளித்துவ மோகினியின் சூதுமதியை, சூழ்ச்சிப் புத்தியை அறிவிக்கிறது, பொதுவாக உலகுக்கு; குறிப்பாக இந்தியாவுக்கு!

## சிவப்பாகும் ஆசியா

13-ம் பக்கத் தொடர்ச்சி

'அவரே ராஜா!' என்று அழைத்து வருகிறது. மன்னரை அழைத்து மகுடம் சூட்டினால் மக்கள் மகிழ்ந்து விடுவர். அவர்கள் மகிழ்ச்சியைத் தன் ஆட்டக்காரராக வைத்து விடுதலைக் கிளர்ச்சியை ஒழித்து விடலாம்—ஹோசிமின் சர்க்காரை இயங்காமற் செய்துவிடலாம் என்று மனப்பால் குடித்தது.

பாவோடாயை மன்னராக்கிவிட்டு, அவருடன் பிரான்ஸ் ஒரு ராஜதந்திர உடன்படிக்கையைச் செய்து கொண்டிருக்கிறது. பாவோடாயின் சர்க்கார் ஒரு பொம்மை சர்க்கார்—பிரான்ஸ் ஆட்டியபடி ஆடவேண்டிய சர்க்கார் என்பதுதான் அந்த உடன்படிக்கையைத் துருவிப் பார்த்தால் கிடைக்கும் கருத்து. இந்த உடன்படிக்கையை "அடிமை சாசனம்" என்றே அழைக்கின்றனர் வியட்நாம் மக்கள்.

வியட்நாமிலிருந்து மட்டுமல்ல—இந்தோசீனவை விட்டே பிரஞ்சு ஆதிபத்தியம் வெளியேறவேண்டும் என்பதுதான் வியட்நாம் மக்களின் இன்றைய முழக்கமாகும்!

ஹோசிமின் ஆட்சியை சீனவும், ரஷ்யாவும் அங்கீகரித்துள்ளன.

பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தால் சிருஷ்டிக்கப்பட்ட பொம்மை ஆட்சியை அமெரிக்காவும் பிரிட்டனும் அங்கீகரித்துள்ளன.

இந்தோ சீன—வளர்ந்து வரும் கம்யூனிச, முதலாளித்துவத் தகராறின் முக்கிய கட்டமாக ஆகிவிட்டது.

ஹோசிமின்—கம்யூனிஸ்டு! என்பதுதான் முதலாளித்துவ மேற்கத்திய நாடுகளின் எதிர்ப்புக்குக் காரணம். அண்மையில் பாவோடாய்க்கு ஏராளமான ஆயுதத் தளவாடங்களை அனுப்ப அமெரிக்கா முடிவு செய்திருக்கிறது.

ஹோசிமின் ஆட்சியை ஏகாதிபத்திய நாடுகள் எதிர்க்கின்றன. ஆனால் மக்களின் ஆதரவோ ஹோசிமினுக்கு இருக்கிறது.

பாவோடாயை, அமெரிக்கா பிரிட்டன், பிரான்ஸ் ஆதரித்தால் ஹோசிமினை ரஷ்யாவும் சீனவும் ஆதரிக்கின்றன. எனவே, தகராறு வளர்ந்து முதலாளித்துவ — கம்யூனிசக் கூடாரங்களின் 'மோதுதல்' இந்தோ சீனவில ஏற்பட்டால் கூட ஆச்சரியமடைவதற்கில்லை!

### சையாம்

மேற்கத்திய நாடுகளுக்கு என்றுமே தலைவணங்காத முடியரசு நாடு! இதன் மக்கள் தொகை ஒன்றே முக்கால் கோடி. சையாம் மன்னர் பெயர் பூமிபால் அடுலேட். இந்திய நாகரீகமும், புத்த மதமும் இங்கு 2000 ஆண்டுகளுக்கு முன்பே பரவியிருக்கிறது.

இந்நாட்டில் 1938-ல் ஜனநாயக வாதிகள் இரத்தம் சிந்தாப் புரட்சி மூலம் மன்னரின் எதேச்சாதிகாரத்தைப் போக்கினர். ஜனநாயக வாதிகளைத் தலைமை தாங்கி நடத்திய மார்ஷல் பிபுல் சோங்கிராம் 1938-ல் பதவிக்கு வந்து, பின் சர்வாதிகாரியாகி, கடந்த உலகப் போரின் போது ஜப்பானியருடன் சேர்ந்து கொண்டார். போர் முடிவில் மீண்டும் ஜனநாயக மந்திரிசபை ஏற்பட்டது. ஆனால், 1948-ல மீண்டும் சோங்கிராம் ராணுவப் புரட்சி மூலம் ஆட்சி பீடமேறினர். சையாம்—ஆசியாவின் நெற்களஞ்சியம் என்று கூறக்கூடிய பெருமை வாய்ந்ததாகும். இரத்தினக் கற்கள், ஈயம், தேக்கு முதலானவை முக்கிய உற்பத்திப்பொருள்கள். இந்நாட்டில் 30,000 இந்தியர் வாழ்கின்றனர்.

சையாம் மக்கள் பொதுவாக ராஜ விசுவாசம் கொண்டவர்கள். மன்னர் மீது பக்தி படைத்தவர்கள். கம்யூனிசம், சையாமில் வெகு எளிதில் எங்கும் பரவ இயலாது என்றாலும், இப்போது அண்டை நாடான சீன 'சிவப்பாகி'விட்ட காரணத்தால் அதன் எதிரொலி இங்கும் அடிக்கடி தென்படுகிறது. மேற்கத்திய வல்லரசுகளின் பண உதவியோ அல்லது ரஷ்யாவின் நேசமோ எதுவுமில்லாமல் வாழக்கூடிய நாடு சையாம். எனினும், இப்போது அமெரிக்க முதலாளித்துவம் சையாமைத் தன்கைவசப் படுத்த முயன்று வருகிறது.

### பர்மா

அண்மையில் சுதந்திரமடைந்த பர்மா; இந்தியாவின் அண்டை நாடு. இதன் மக்கள் தொகை சுமார் இரண்டுகோடி. பர்மா, கடந்த உலகப்போருக்குப் பின் அழுகிழந்த விதவையாகி விட்டது. ஆங்கிலேயர் ஆட்சிப் பொறுப்பை பர்மிய மக்களிடம் ஒப்புவிக்கச் சென்ற நாள் முதல், பர்மா—பல மூலைகளிலும் தொல்லைகள் தாக்க திண்டாடி நிற்கிறது. அரிசி, தேக்கு, பெட்ரோல், மண்ணெண்ணெய் முதலியவை பர்மாவின் முக்கிய உற்பத்திப் பொருள்கள். கரீனியர் என்ற உள்நாட்டு மக்களின் இடைவிடாத தாக்குதல், வெள்ளையுடையினர் என்ற கிளர்ச்சிக்காரர்கள், கம்யூனிஸ்டுக்களின் கலவர நிகழ்ச்சிகள் ஆகிய இடைவிடாத தொல்லைகளைச் சமாளிக்கமுடியாது, பர்மிய குடியரசுச் சர்க்கார் அவதிப்பட்டு வருகிறது. பர்மா, கம்யூனிஸ்டுகளின் பார்வையில் சீக்கிரம் விழுந்துவிடும் என்ற பயம் எழும்பியிருக்கும் காரணத்தால் அமெரிக்கா உதவி செய்வதாக உறுதி கூறி வருகிறது. எனினும், பர்மிய மக்களிடையே நிலவும் ஏழ்மையும் இல்லாமையும் கம்யூனிசக் கொள்கைக்கே அவர்களை நடத்திச் சென்றால் அதிசயமெதுவும் இல்லை.

### இந்தோனேஷியா

ஜாவா, சுமத்ரா, போர்னியோ, முதலான 3000 தீவுகள் சேர்ந்தது இந்தோனேஷியா. டச்சுக்காரரின் ஆதிபத்தியத்திலிருந்த இந்தோனேஷியா, கடந்த உலகப்போரின் விளைவாக ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கு ஆளாயிற்று. போர் முடிந்ததும் மீண்டும் டச்சு ஆதிபத்தியமே நாட்டின் அதிகாரியாயிற்று என்றாலும், ஜாவா, சுமத்ரா, மதுரா, ஆகிய தீவுகளில் செல்வாக்குப் பெற்ற குடியரசுக்கட்சியினர் 17—8—45-ல் சுதந்திரப்பிரகடனம் செய்தனர். எனினும், டச்சுக்காரர்கள் எதிர்க்கவே, ஜப்பானியரிடமிருந்து பெற்ற ஆயுதத் தளவாடங்களையும் ராணுவப் பயிற்சியையும்கொண்டு குடியரசுப் படையினர் தாக்கினர். இவ்விதம் தொடர்ந்து உள்நாட்டுப் போருக்கு இரையாகிக்கிடந்த இந்தோனேஷியா அண்மையில்-சுதந்திரம் பெற்றுப் புதுக்குடியரசு உதயமாயிற்று.

இந்தோனேஷியா பல தீவுகளைக் கொண்ட நாடாகஇருக்கும் காரணத்தாலும், ஆட்சிப்பீடமேறியோரின் நிர்வாகத் திறமையின்மையாலும் அடிக்கடி உள்நாட்டுக் கலகங்கள், ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன.

இவைகளையெல்லாம் சமாளிக்க

வேண்டிய பொறுப்பு புதுச் சர்க்காரைச்சார்ந்தது என்றாலும் கம்யூனிசம் வளர்வதற்குரிய சீர்குலைவும் ஏழ்மையும் நிறைந்து நிற்கிறது.

### மலேயா

மலேயா-ஒன்பது சமஸ்தானங்கள், பினாங்கு, மலாக்கா, ஆகியமாகாணங்கள் சேர்ந்த பெடரேஷன் சர்க்கார், 1946 ஏப்ரல் முதல் தேதி ஏற்பட்டது. 50 லட்சம் மக்கள் இங்குவாழ்கிறார்கள். பிரிட்டிஷ் ஹைகமிஷனர் ஜனரலின் பார்வைக்குட்பட்ட பெரிய ரப்பர் தோட்டங்களெல்லாம் இங்கு வெள்ளையர் ஆதிக்கத்திலிருப்பதால், வெள்ளையரை எதிர்த்து, இடைவிடாது தாக்குதல்கள் நடைபெற்று வருகின்றன. இதற்குக் கம்யூனிஸ்டுகளே மூலகாரணமாக இருக்கின்றனர். இதை அடக்கத்தீவிர நடவடிக்கைகளும், 'ஆட்கொல்லி' சட்டங்களும் அமுல் நடத்தப்பட்டும், கலவரநிகழ்ச்சிகள் அதிகமாகிக் கொண்டேயுள்ளன.

* * *

தென் கிழக்காசியாவின் சில நாடுகளின் நிலை இது. எங்கும், கிட்டத்தட்ட கம்யூனிச வளர்ச்சிக்கான அறிகுறிகளே தென்படுகின்றன. எனினும், வீண்தொலலை, வேண்டுமென்றே விளைவிக்கும்நாசவேலைகள், பர்மா மக்களிடையே கம்யூனிஸ்டுகளின்மீது வெறுப்பை எழுப்பி வருகிறது. இந்தோசீனா, சீனா, பர்மா, மலேயா, தவிர்த்து ஏனைய நாடுகளில கம்யூனிஸ்டுகளின் வளர்ச்சி—தடைப்படுவதற்கான நிகழ்ச்சிகள் தென்படுகின்றன. அமெரிக்க முதலாளித்துவம் கம்யூனிஸ வளர்ச்சியைத் தடுக்கும் நோக்குடன் இந்த நாடுகளுக்குப்பணஉதவியும் படை பலமும் அளிப்பதாகக் கூறிக்கொண்டிருந்தாலும்,எண்ணத்தில் தூய்மையில்லாத காரணத்தால், மக்கள் நலனை மனதில்வைப்பதற்குப் பதில், மக்களை ஆளும்சர்க்கார்களைத் தன் பிடியில் சிக்க வைக்கவே முயற்சித்து வருகிறது.

எனவே,ஏழ்மையும் இல்லாமையும் இந்நாடுகளில் நீக்கப்பட்டாலன்றி, அதற்கான வழிவகைகள் காணப்பட்டாலன்றி, வளரும் கம்யூனிசத்தைத் தடுப்பது சாத்தியமாகாது.

✲

### பொழுதுபோக்கு; உயிர்வாதை!

7-ம் பக்கத் தொடர்ச்சி

போடுவது போல, புள்ளி விபரத்துடன் கூறி மொத்தம் ரூபாய் 108 இலட்சம் நஷ்டம் ஏற்பட்டிருக்க வேண்டுமென்று எடுத்துக் கூறியிருக்கிறார், சட்டசபையின் உறுப்பினர்களிலே ஒருவர்!

நிதி மந்திரியாருக்கு, எவ்வளவு தொகை "கைவிட்டுப்போகிறது" என்று கணக்குத் தெரியவில்லை! 'டைப்' அடித்தவர் மீது பாய்ந்து விட்டு, "இவ்வளவுதான் இப்போது பதில் கூற முடியும் என்றால்" என்று முடித்திருக்கிறார்.

நல்லவேளை! உறுப்பினரொருவர், புள்ளிவிபரத்துடன், ஒரு டன்னுக்கு எத்தனைமனு, ஒரு மனுவுக்கு அதிகமாகக் கொடுத்த தொகை என்ன என்று விபரமாகக்குறிப்பிட்டு,மொத்தம் 108ஆயிரங்களல்ல, 108இலட்ச ரூபாய்கள் என்று அறிவித்திருக்கிறார்!

சம்பவம் நடைபெற்றது மார்ச் 31ந் தேதி—வேறு எங்குமல்ல; சென்னைச் சட்டசபையிலதான்!

* *

"வேதனை நிரம்பிய விளையாட்டுகளாகயிருக்கின்றன, ஆட்சியாளரின் நடவடிக்கைகள்! விபரமறியாததன் விளைவு-ஆளவந்தாரை,திசைதவறித் 'தீங்கு' பயக்கும் பாதைகளில் திருப்பிவிடுகின்றன. காங்கிரசாரின் ஆட்சி, கண் மூடி காட்டில் விடப்பட்டவன் தட்டுத் தடுமாறுவது போலகெட்டலைகிறது" என்று நம் போன்றார் குற்றம் சாட்டும்போது, கொதிப்பேறிய வார்த்தைகளை வீசுகின்றனர், நமது நண்பர்களில் சிலர். 'வேலைகெட்டதுகள். வேணுமென்றே துஷ்பிரச்சாரம் செய்கிறார்கள்' என்பது போன்ற 'விஷம்' நிறைந்த வார்த்தைகளே!

ஆளவந்தார் —நமது பங்காளிகளல்ல; ஆட்சிப்பீடத்தைக்கைப்பற்ற வேண்டும் என்ற ஆசையுடையவர்களுமல்ல நாம். ஆனால், ஆட்சிபீடம் ஏறி, மக்களின் சர்க்காரை நடத்திச் செல்லும் மந்திரிமார்களின் இதயங்கள் "இருட்டாக" இருப்பதைக் காண இதயம் வேதனைக் களஞ்சியமாக ஆகிறது.

சட்டசபையில் வாங்கிய பொருளுக்கான விலை கூற திண்டாடுகிறார்-மந்திரி, மதி மிகுந்தவர் என்று போற்றப்படுபவர்.

"மறந்துவிட்டேன்" — இந்தப் பதில் கிடைத்திருந்தால்கூட பரவாயில்லை! 'எவ்வளவோ தொல்லைகள், வேலைகள்—எப்படி நினைவிருக்கமுடியும்!' என்று சமாதானங் கூறலாம்! அப்படிக்கூட கூறவில்லை, அவர். கொஞ்சநேரத்துக்குள் பெருக்கிப் பார்த்தால் தெரியக் கூடிய விடை—எனினும் அமைச்சர் அறிவிக்கவில்லை. உறுப்பினர் கூறவேண்டிய நிலை யேற்பட்டிருக்கிறது! அமைச்சர், கணக்குத் தெரியாதவர்—என்பதல்ல நமது குற்றச்சாட்டு. அந்த அளவில் 'அசிரத்தை' யுள்ளவர்களாகயிருக்கிறார்கள்—கடமைப் பொறுப்பில் கவலை காட்டாமலிருக்கிறார்கள் என்பதுதான்!

* *

அமைச்சர்களின் 'அசிரத்தை' மாகாணப் பொதுப் பணத்தில் ஒருகோடியே 'எட்டாயிரம் ரூபாயை நஷ்டமாக்கியிருக்கிறது.

உணவுப்பொருள் — மாகாணத்தை ஆட்டிப்படைக்கும் ஒரு பிரச்சனை. இங்குள்ளோர் எல்லோருக்கும் போதுமான உணவுப் பொருள்கள் இல்லை—எனவே வெளியிடங்களிலிருந்து இறக்குமதி செய்யவேண்டியிருக்கிறது — என்று கூறப்படுகிறது, ஆளவந்தோரால்.

ஆளவந்தாரின் நிலைமையை நாம் அறியமுடியாதவர்களல்ல. இல்லையென்றால் இருக்கிற இடத்திலிருந்து விலைக்கு வாங்கித்தான் ஆக வேண்டும்.

பஞ்சமும் பசியும் சென்னையைப் பாதிக்காமலிருப்பதற்காக லட்சக் கணக்கான 'டன்கள்' இறக்குமதி செய்யப்படுகின்றன.

'இறக்குமதி செய்து தருக' என்று இவர்கள் வேண்டுகோள் விடுக்க, இம்மாகாணத்தின் தேவையைக் கவனித்து, 'வெளியிலிருந்து உணவுப் பொருள்களை அனுப்பும்பொறுப்பை இந்திய சர்க்கார் செய்து தருகிறது.

"இந்தியா, ஒரே நாடு—எல்லா மாகாணங்களும் சகோதர நிலையுடன் வாழவேண்டும். ஒரு மாகாணத்தைப் பாதிக்கும் பிரச்னை

(10-ம் பக்கம் பார்க்க)

# பொழுதுபோக்கு; உயிர்வாதை!

'ஐயோ, அப்பா!' என்று அலறித் துடிக்கிறான், வயிற்றுவலி வதைக்கிறது, 'உயிர் போய்விடும் போலிருக்கிறதே உதவுங்களேன்' என்று உரத்துக் கத்துகிறான். ஓடிவந்து உடனடியாக உதவுங்களேன் என்று அலறுகிறான்!

X X X

"வடை வாங்கலியோ, வடை" என்று கோடிக்கடைக் கூடைக்காரி கூவிச்செல்கிறாள், வீதியிலே; விற்றுப் போனது போக வேண்டுவாரவற்றுக் கிடந்து மீந்துபோன வடைகளைக் கூடையில் போட்டுக்கொண்டு!

X X X

"காசு கொடப்பா! கணப்பொழுதில் போகிறதா, இல்லையா பார்" என்று கதறித் துடிப்பவனின் நண்பன், ஓடுகிறான், காசுடன்! கூடைக்காரியிடம் சென்று வடைகளை வாங்கிக் கொண்டு வருகிறான். 'இந்தா நண்பா, இதைச் சாப்பிடு......வலி போய்விடும். இந்த வடைக்கா இரண்டணா — என்றெண்ணாதே. காசைப் பற்றிக் கவலைப்படாதே, துயர் போக்கும் இது...மனங்கூசுகிறதா, பரவாயில்லை! இதாவது கிடைத்ததே இந்த நேரத்துக்கு என்று எண்ணு..." என்று மருத்துவ விளக்கம் தருகிறான்.

X X X

விளக்கம் கேட்ட 'வேதனைப்படுபவன்' —"என்னப்பா, இது வேடிக்கை! இதற்காகவா கொடுத்தேன் இரண்டணா...என்னை ஏமாற்றிவிட்டாயே! ஓரணா கொடுத்தால் போதுமே ஒரு சோடாவுக்கு—வலியும் தீரும், வயிறும் அடங்கும்...வயிறுவலி போக்க வழிகேட்டால் 'வராதவலி' வர வசதி செய்துவிட்டாயே! வயிற்று வலியை வடையா கேட்கும்......அதுவும் அரையணா பெறாத இந்த வடைக்கா இரண்டணா...என்னப்பா, இது?" என்று கேட்காமல், "தருகிறாயா—தா! இதையும் போட்டுவைக்கிறேன்" என்று தின்றுவிட்டுச் சிறிது நேரத்திற்கெல்லாம் 'ஐயோ, அம்மா! குத்துதே குடையுதே கொல்லுதே' என்று கூச்சல் போட்டால், அந்த 'இரண்டு நபர்'களையும் காண்போருக்கு இரக்கம் பிறக்காது; எரிச்சல் தான் உண்டாகும்!

★

சட்டசபையிலே ஒரு பிரச்னை! அதுவும் முக்கியமான விஷயம் குறித்து......

"சர்க்கார் அதிகவிலை கொடுத்து வெளி மாகாணத்திலிருந்து அரிசி வாங்கியிருக்கின்றனர். சர்க்காரின் இந்தப் போக்கால் மொத்தம் எவ்வளவு நஷ்டம்?" என்று உறுப்பினர்கள் கேள்விமேல் கேள்வி கேட்டனர்.

சர்க்கார் சார்பில் பதில் கூறியவர் "மணங்கு ஒன்றுக்கு பத்து ரூபாய் அதிக விலை கொடுத்து வாங்கியிருக்கிறோம். இந்த விலைப்படி நாம் வாங்கியிருப்பது 39,000 டன்களாகும். எனவே இதன் மூலம் மொத்தம் 1. 08 லட்சம் (108 ஆயிரம்) நஷ்டமாகிறது" என்று தகவல் தந்தார்.

"ஏனிந்த விலைகொடுக்கவேண்டும், நமது மாகாணத்தில்மணு 15 ரூபாய்க்குக் கிடைக்கும்போது வெளிமாகாணம் மட்டும், ஏன் 25 ரூபாய் விலை சொல்லவேண்டும் அதை ஏன் நாம் வாங்கவேண்டும்?"

"இந்தியாவுக்குள்ளிருக்கும். ஒரு மாகாணம் 'அதிக விலை' வைத்து 'கள்ளமார்க்கெட் செய்வதா? இதை, ஏன் இந்திய சர்க்காரிடம் எடுத்துக் காட்டக் கூடாது?"

"வெளி நாடுகளிலிருந்து இறக்குமதியாகும் அரிசியைவிட அருகிலிருக்கும் மாகாணத்திலிருந்து வரும் அரிசிக்கு ஏன் இப்படி "அள்ளி"க் கொடுக்கவேண்டும்? வெளிநாட்டிலிருந்து வரும் அரிசியின் விலை மணு ஒன்று 17 ரூபாய்தானே!"

"அதிக விலை கொடுத்து வாங்கினீர்களே, அந்த அரிசியின் அழுகு எப்படியிருக்கிறது தெரியுமா...... இங்கு உற்பத்தியாவதை விட மட்டரகம்......மோசமான அரிசி...இதற்குப்போய் ஏன் இவ்வளவு பணம் கொடுக்கவேண்டும்?"

"அவர்களுக்கு அள்ளி வீச மனமிருக்கிறதே, அதுபோல இங்குள்ள விவசாயிகளுக்கும் அதிகப் பணம் கொடுங்களேன்!"

இதுபோன்ற கேள்விகள் எழும்பின, சட்ட சபையின் நானு பக்கங்களிலிருந்தும், கண்டனக் குரல்கள் எழும்பின! கடைசியில் ஒருவர் கேட்டார்.

"இப்படி, அதிக தொகை கொடுத்தால் எவ்வளவு நஷ்டமாகிறது! கோடி ரூபாய்க்குமேல் பொதுப பணம் விரயமாகியிருக்கும் போல் தெரிகிறதே! — அமைச்சரோ 'ஆயிரக்கணக்கில்' கூறுகிறார்— கணக்குப்போட்டுப் பார்த்தாலோ 'கோடிக்குமேல்' போகிறது! இது எப்படி?" என்று. பதில் தந்த அமைச்சர், 'டைப்' அடிக்கப்பட்ட காகிதத்திலிருந்த தகவலைத் தான் தந்ததாகவும், கணக்குப் போட்டுப் பார்க்கவில்லை யென்றும் கூறிவிட்டு, 'இனிமேல் என்னை ஒன்றும் கேட்காதீர்கள். இவ்வளவுதான் தகவல் தர முடியும்...மணு ஒன்றுக்கு 10 ரூபாய் அதிகம் கொடுத்திருக்கிறோம்...இவ்வளவு தான் என்னால் சொல்ல முடியும்!" என்று பதில் தந்திருக்கிறார். பதில் தந்தவர், மாகாணத்தின் உணவு மந்திரி!

ஒருமணுக்கு 10ரூபாய்

மொத்தம்வாங்கியது 39,000-டன்

ஒரு டன் —28—மணு

ஆகமொத்தம் 39,000X28X10

ரூபாய் என்று பள்ளியில் கணக்குப்

(6-ம் பக்கம் பார்க்க)

# திராவிட நாடு

ஞாயிறு] 16—4—50 [காஞ்சி

## தாமதம் வேண்டாம்

—✲—

"சர்க்கார் கொண்டுவரும் இம் மசோதா இச்சந்தர்ப்பத்திற்கு ஏற்ற தல்ல. எனவே, இதை மக்கள் அபிப் பிராயத்துக்கு விடவேண்டும்"

—ராசேந்திரபிரசாத்

★

"தேர்தல் நெருங்கிக்கொண்டிருக் கிறது என்பதை நினைவூட்டுகிறேன் உங்களுக்கு! இப்போது நீங்கள் நிறைவேற்ற விரும்பும் இந்த மசோதா, வரப்போகும் தேர்தலில் நம்மை மிகவும் பாதிக்குமென எச் சரிக்கிறேன்."

—டாக்டர் பட்டாபி

★

"இந்து தர்மத்தில் பல முறை கள் இருக்கின்றன. மாதா பிதா இறந்து விட்டால் அவர்களுக்கு கருமாதியும் சிரார்த்தம் செய்வதும் யாருடைய கடமை! — மகனுடைய தல்லவோ—இதுபோல பல நியதி கள் இருக்கின்றன இந்துதர்ம சாஸ்திரத்தில். இதையெல்லாம் அனு சரிக்கவேண்டும்"

— அல்லாடி

★

"முக்கியஸ்தர்கள் கூறிவிட்டார் கள், இந்த நடவடிக்கை கூடா தென்று! காங்கிரஸ் தலைவர், இன் னொரு உத்தமர், மற்றொரு சட்ட நிபுணர் இம்மசோதா வேண்டா மென்று கூறிவிட்டபொழுது சர்க் கார் ஏன் இம்மசோதாவை நிறை வேற்றத் துடிக்கவேண்டும். வேண் டாம் 'மசோதாவை கைவிடுங்கள்!'

—இந்து தலையங்கம்

★ ★

"இம்மசோதாவால் இந்து தர்மத் துக்கு எந்தவித இடையூறும் வந்து விடப் போவதில்லை. தென்னிந்தியா விலுள்ள வைதீகக் குடும்பத்தைச் சேர்ந்தவன்தான் நான்.........சிலர் இரண்டு மனைவிகளுடன் வாழ வேண்டுமென்று ஆசைப் படுகின்ற றனர். இன்னும்சிலர் இரண்டுமனைவி களுடன் வாழ்பவர்களைக் கண்டு சந் தோஷப்பட விரும்புகின்றனர். இந்த விஷயமாக சர்க்கார் எடுக்கும் நட வடிக்கை ஆர்யமுறையிலுள்ள ஒரு மோசமான தவறை, சட்டசபை மூலம் திருத்துவதாகும்"

—மந்திரி சந்தானம்

★

"இது ஒரு முக்கியமான பிரச்னை ...எனது தலைமையில் ஆட்சி இயங்க வேண்டுமா, வேண்டாமா என்பது தீர்மானிக்கக் கூடிய ஒரு விஷயமாக இதை நான் கருதுகிறேன். எதிர்ப் புக்காக இதை கைவிட்டுவிட முடியாது!"

—பிரதமர் நேரு

★

எதிர்ப்பு! முடியாது என்ற பதில்,

'நேருசர்க்கார் ஒழிக!'

எதிர்த்தவர்கள் கூச்சலிட்டனர், ஆர்ப்பாட்டம் நடத்தினர். என் னென்ன செய்ய முடியுமோ அந்த வழிகளிலெல்லாம் ஈடுபட்டனர்.

இந்திய சட்டசபையில் இந்துச் சட்டத்திருத்த மசோதா இரண்டா வது முறையாகப் படிக்கப்பட்ட பொழுது, எழும்பிய எதிர்ப்புக் குரல்கள்தான் நாம் முதலில் தந் திருப்பது.

இந்து தர்மம் பாழாகிறது— ஏனிந்த மசோதாவாம்? சாஸ்திரத் தில் கைவைக்க இவர்கள் யார்!— முடியாது, விடமாட்டோம்—என்று கச்சை கட்டினர்! —களம் அறியா 'வீரர்'கள் கச்சை கட்டினர்!

சாபமிட்டனர், 'அடுக்குமா இது, அழிந்துபோவீர்கள்' என்று அல றினர்.

இந்துச் சட்டத்தில் சிலதிருத்தங் களைச் செய்யவேண்டுமென சட்ட மந்திரி டாக்டர் அம்பேத்கார்— ஒரு திருத்த மசோதாவைக் கொண்டு வந்தார்.

அம்பேத்கார்!—அடக்கி அமுக்கி வைக்கப்பட்ட வீரர் பரம்பரையின் வழியிலே வந்தவர். இந்துமதத்தின் கோரப்பிடியிலே சிக்கிச் சீரழியும் 'சேரிவாழ்' மக்களின் பிரதிநிதி— அவர் கொண்டுவந்தார் திருத்த மசோதா!

சாதிகள் ஒழியவேண்டும்—சம ரசம் பரவவேண்டும் என்பதுகூட அல்ல, இம் மசோதா.

பாழையில் ஏற்பட்ட துவாரங்களை அடைப்பது, இடிந்துபோய்க் கொண்டிருக்கும் மண் சுவருக்கு முட்டுக் கொடுப்பது, இம் மசோதா —குறிப்பாகக் கூறவேண்டுமானால் இந்து மதத்தை இன்னும் வலிவுள்ள தாக்குவது.

இத்தகைய மசோதா கூடாதாம் —கொக்கரிப்பது கோடிவீட்டு கன பாடிகள் மட்டுமல்ல, சாத்திரமே சக லமும் என்று போதிக்கும் சங்கராச் சாரியார், நாட்டுத் தலைவர்களில் நல் லோர் என்று கூறப்படும் பட்டாபி, பிரசாத் போன்ற பலர் கூறியிருக் கின்றனர்.

பட்டாபி—பரம பாகவத பண்டித ரல்ல, நாட்களையோட்ட 'பகவான்' திருநாமத்தைச் சொல்லிவாழும் நிலையில்இல்லாதவர்! நாட்டையாளும் கட்சியின் தலைவர்—அவர் கூறினர், அப்போது சட்டசபையில 'இப் போதுவேண்டாம், தேர்தலில் தீங்கு வரும், இதனல் எதிர்ப்பு வரும்' என்று!

பிரசாத்—இன்று இந்நாட்டின் குடியரசுத்தலைவர், அவரும் 'அறி வுரை' தந்தார், 'ஆகாது இந்த அவ சரம் — கொஞ்சம் பொறுத்துப் போகவேண்டிய காரியம் இது' என்று போதனை புரிந்தார் பார்லி மெண்டில்!

★

பலதாரமணம் கூடாது-பல பெண்களை ஒரு ஆண் மணக் கும் அநீதி நீடிப்பது கூடாது.

ஆணைப்போல் பெண்ணுக் கும் தந்தையின் சொத்தில் பங்கு உண்டு. சொத்துரிமை

பெண்களுக்கும் இருக்க வேண்டும்.

விவாகரத்து செய்து கொள்ள ஆணுக்கு மட்டுமல்ல, பெண்ணுக்கும் அருகதை உண்டு.

அம்பேத்கார் செய்ய விரும்பிய முக்கிய திருத்தங்கள் இவைதான். இதற்கு இவ்வளவு எதிர்ப்பு—எச்சரிக்கை-சனாதனிகளிலிருந்து 'சகலமும் அறிந்த' அறிஞர்வரை சல்லடம் கட்டினர்—இன்னும் விட்டேனா பார் என்று வீர முழக்கம் செய்கின்றனர்.

★

கடந்த டிசம்பர் மாதம் இம் மசோதா இரண்டாம் முறையாக சட்ட சபையில படிக்கப்பட்ட பொழுது, இவர்கள் எதிர்ப்பு நிரம்பியது—'ஒரு தலைச் சார்புள்ள' பத்திரிகைகள் இம்மசோதா கூடாது என்று எழுதின, பொதுமக்கள் ஆதரவு இல்லையென்று வாதாடின! வர்ப்பு செய்யும் 'வக்கிரங்களைக்' கண்ட பண்டிதநேரு, இம் மசோதா மூன்றுவது முறையாக சபையில் பிரரேபிக்கப்படுமுன் பொதுஜனப் பிரதிநிதிகளடங்கிய ஒரு மாநாட்டைக் கூட்டுவதாக வாக்களித்தார்.

அந்த மாநாடு வரும் 20ந் தேதியன்று புதுடெல்லியில் நடைபெறவிருக்கிறது. இந்துச் சட்டத் திருத்த மசோதாவை, நாட்டின் பல மாகாணங்களிலுள்ள மாதர் சங்கங்கள் பல வரவேற்றிருக்கின்றன. முற்போக்குக் கட்சிகள் யாவும், இது உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டுமென வலியுறுத்தியிருக்கின்றன.

இரண்டு நாட்களுக்கு முன், சென்னையில் முன்னேற்றக் கழகச் சார்பில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டிலும், தேனாம்பேட்டை இந்துச் சட்டத் திருத்த மசோதா ஆதரிப்பு மாநாட்டிலும் உடனடியாக இம் மசோதா நிறைவேற்றப்படவேண்டுமென வற்புறுத்தித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருப்பதோடு, தினசரி ஏராளமான தந்திகள் தனிப்பட்டோர் சார்பிலும் இந்திய சர்க்காருக்குச் சென்ற வண்ணம் இருக்கின்றன.

★

சாதாரண திருத்தங்கள் — எனினும்,எதிர்ப்பு! சனாதனமும், வைதீகமும் நாட்டைவிட்டு நழுவ விடாமலிருக்கஎன்னென்ன எதிர்ப்புகளைக் கிளப்பும் என்பதற்கு இது ஒரு சாட்சி!

அம்பேத்காரால் கொண்டுவரப்பட்டிருக்கும் இம்மசோதா புதியது அல்ல; பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னமே தயாரிக்கப்பட்டது—எனினும் மக்கள் முன்வர இத்தனை நாட்கள்!

"காலங் கடத்தும் நோக்குடன் நடைபெறும் எதையும் அங்கீகரிப்பதற்கு இயலாது"

என்று விவாதம் நடைபெறுமுன் பிரதமர் அறிவித்தார் சட்ட சபையில்.

இப்போது இங்குள்ளசனாதனமும் வைதீகமும், காலங் கடத்தும் நோக்கத்துடனேயே காரியங்களில் ஈடுபட்டுவிடுகின்றன!

பழைமை, ஒரு தர்ப்பைப்புல்! வெள்ளத்தைக் கண்டால் வளையும்-அடிபணியும்! 'வெள்ளமில்லை—நம்மைக் கேட்க யாருமில்லை—என்றால், நிமிர்ந்து நிற்கும்!

சனாதனிகளின் சல்லடமும், மதவாதிகளின் எதிர்ப்பும் — சீர்திருத்தத்துக்கு முன், செல்லாக் காசுகள்! தீயைக் கண்டால் மிரளும் 'குள்ள நரிக'ளுக்காக-கோலோச்சுவர் அஞ்சுதல் கூடாது—ஊளையைக் கண்டு மயங்குதல் ஊராள்வோருக்கு அழகல்ல!

ஆகவே, உடனடியாக நிறைவேற்றுங்கள், தாமதம் வேண்டாம் என்று வற்புறுத்துகிறோம் — இந்திய சர்க்காரை மேற்று நடத்துவோரை, மக்கள் சார்பில், 'சீர்திருத்தம் செழிக்க வேண்டும்' என்ற சிந்தனையாளர்களின் சார்பில்!

★

## அறப்போர் அங்கு!

அறுநூறு ஆப்பிரிக்கப் பெண்மணிகள் ஊர்வலமாகச் சென்றனர்! 'கூடாது இந்த முறை, எங்களைக் கேலி செய்வதாக இருக்கிறது' என்று முழக்கமிட்ட வண்ணம் அணிவகுத்துச் சென்றனர்—ஆர்ப்பாட்டம் நடத்தினர்!

சம்பவம் டர்பன் நகரில், தென் ஆப்பிரிக்கப் பெண்மணிகளால் நிகழ்ந்ததாகும்.

"எல்லா ஆப்பிரிக்கப் பெண்மணிகளும் தங்கள் பெயரைப் பதிவு செய்துகொள்ள வேண்டும்" என்று தென் ஆப்பிரிக்க சர்க்கார், ஒரு சட்டம் நிறைவேற்ற இருக்கின்றனர்.

இந்த வாரத்தில் இச்சட்டம் பற்றிய நகல் வெளியாகியிருக்கிறது. அதில் வகுக்கப்பட்டுள்ள ஷரத்துக்களில் ஒன்று 'எந்த ஆப்பிரிக்கப் பெண்மணியாவது உத்தியோகம் பெற விரும்பினால், அதற்கு முன் வைத்தியப் பரிசோதனைக்கு ஆளாக வேண்டும், என்பதாகும்.

இந்த நிபந்தனைகள் தங்களது சுதந்திர நிலையைப் பறிப்பதாகும் என்று கருதியே, டர்பனைச் சேர்ந்த பெண்மணிகள் ஆர்பாட்டம் செய்திருக்கின்றனர்!

நேராக நகரசபைக்குச் சென்று, இந்நகல் திட்டத்தை வகுத்த "புண்யவானைப்" பார்க்கவேண்டுமென்று வற்புறுத்தினராம். கடைசியில், பலர், உறுதிமொழிகள் தந்ததின் பேரில், கலைந்து சென்றிருக்கின்றனர்.

உரிமை முழக்கம், அங்கு, ஆப்பிரிக்காவில் எழும்பியிருக்கிறது! தங்கள் சுதந்திர வாழ்வைச் சர்க்கார் தட்டிப் பறிக்கிறது என்று அறிந்ததும்,வீராவேசமாகக்கிளம்பி, நகர சபைக்குச் சென்று "மறியல்" செய்திருக்கின்றனர். கண்ணியப் பொறுப்புடன் உரிமைகோரி "அறப் போர்" நடத்தியிருக்கின்றனர்!

## சந்தாதாரர்களுக்கு

"திராவிட நாடு" சந்தாதாரர்கள், சந்தா சம்பந்தமாகக் கடிதம் எழுதும்போது சந்தா எண்ணைக் குறித்தெழுத வேண்டும். சந்தா எண் குறிப்பிடாத கடிதங்கள் கவனிக்கப் படமாட்டா. சந்தா முடியும் தேதி ஒவ்வொரு முகவரிக்கு அடியிலும் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப் பார்த்துச் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளவும்.

மானேஜர்.

## பொழுதுபோக்கு உயிர்வாதை!

6-ம் பக்கத் தொடர்ச்சி

இன்னொரு மாகாணத்தையும் தான் பாதிக்கும்.

வேற்றுமைக்கு இடமில்லை; எல்லோரும் இந்திய மக்கள். எல்லோரும் ஓரினம்"

இதுபோன்ற ஒற்றுமைக் கீதங்கள் முழக்கப்படுகின்றன.

"வேதனைப்படுகிறோம், பின் தங்கிக் கிடக்கிறோம், வடநாடு வளர்ந்து விட்டது, வளம்பெற்று வருகிறது"—இது, தென்னாடு நன்னிலைபெறவேண்டும் என்று கருதுபவர்களின் உரிமைக் கீதம்.

இந்த உரிமைக் கீதம் எழும்பினால் "பார், பார்! இந்தக்கெடுமதியினரை பொறுமை கொண்டு பொல்லாதன வெல்லாம் கூறுகின்றனர். வடநாட்டின் மீதுதான் இந்திய சர்க்கார் கவனம் செலுத்துகிறதாம்—தென்னாட்டைக் கவனிப்பதில்லையாம், கூறுகிறார்கள் இந்தக் குறை மதியினர்" என்று குற்றம் சாட்டுகின்றனர்.

X X X

மாற்றாந்தாய் மனப்பான்மை — இந்திய சர்க்காரிடையில் நிலவுகிறது. ஆட்சி அவர்கள் கையிலிருப்பதால் நம்மை ஆட்டிப் படைக்கின்றனர். நமது வாழ்வு அவர்கள் சுகத்துக்குப் பலியாகிறது — என்ற நம்முடைய இதய முழக்கம், வீண்சொல் அல்ல, விவேகமில்லாத வார்த்தையல்ல.

"அரிசியில்லை — அவதிப்படுகிறோம். எனவே, உதவுங்கள்" என்று வேண்டிக்கொண்டனர் மாகாண சர்க்கார், மத்திய சர்க்காரை நோக்கி.

தனக்குத் தேவையான பொருள்களைத் தானாகவே வெளிநாடுகளிலிருந்து தருவிக்கும் அதிகாரம் மாகாண சர்க்காருக்குக் கிடையாது. எனவே மாகாணசர்க்கார், மத்திய சர்க்காருக்குக் கோரிக்கைவிடுத்தனர்.

கோரிக்கையைப் பெற்ற மத்திய சர்க்கார் 39,000 டன் அரிசியை ஐக்கியமாகாணத்திலிருந்து (இப்போது உத்தர பிரதேசம்!) அனுப்பிவைத்திருக்கிறது.

ஐக்யமாகாணம் வெளிநாடல்ல; இந்திய யூனியனிலுள்ள ஒரு பாகம், அங்கிருக்கும் அதிகஅரிசியை இங்கு அனுப்பிவைத்திருக்கிறது.

கேட்டது சென்னை மாகாணம்—அரிசியை அனுப்பியது ஐக்கிய மாகாணம். இரண்டும் இந்திய யூனியனைச் சேர்ந்தவை.

ஆனால் சென்னையில் ஒருமனு அரிசியின் விலை ரூ. 15; ஐக்கிய மாகாணத்திலிருந்து அனுப்பப்பட்ட அரிசியின் விலையோ 25!

அதே நேரத்தில் கடல் கடந்து வெளிநாடுகளிலிருந்து வரும் அரிசியின் விலை மனு ஒன்றுக்கு ரூ. 17 தான்!

வெளிநாடுகளிலிருந்து அரிசியைத் தருவித்து அனுப்பும் அதிகாரம் பெற்றுள்ள இந்திய சர்க்கார், ஐக்ய மாகாணத்திலிருந்து அரிசியை அனுப்பி வைத்திருக்கிறது சென்னைக்கு, அதிக விலையில்!

மணங்கு ஒன்றுக்குப் பத்துரூபாய் வீதம் அதிகவிலைவைத்து ஐக்கிய மாகாண சர்க்கார் தன்னிடமிருந்த அரிசியைத் தந்திருக்கிறது.

அரிசியை வாங்கியனுப்பிவைத்திருக்கிறது, சென்னை மாகாணத்துக்கு ஐக்கியமாகாணம்— அரிசிக்கு அதிகவிலைவைத்து விற்கிறது—அதிகப்பணம் பெறுகிறது என்பது இந்தியசர்க்காருக்குத் தெரியாத விஷயமில்லையாம் — சட்டசபையிலேயே அறிவித்திருக்கிறார் அமைச்சர்.

அரிசியை அதிகவிலைக்கு விற்கிறது என்று தெரிந்தும் அதைவாங்கியனுப்பியிருக்கிறது, வாங்கியனுப்பும் அதிகாரம் படைத்த இந்திய சர்க்கார்.

இல்லை, தேவையாக இருக்கிறது என்று தெண்டனிட்ட சென்னை சர்க்காரோ விலையைப்பற்றிக் கவலைப்படாது 39,000-டன் வாங்கியிருக்கின்றனர் — நாட்டின் பொதுப் பணத்தில் 108-லட்சரூபாய்களை 'தத்தம்' செய்திருக்கின்றனர் ஐக்கிய மாகாணத்துக்கு — இந்த ஏற்பாடு இந்திய சர்க்காரால் நடைபெற்றிருக்கிறது.

வெளிநாடுகளிலிருந்து நேரடியாக உணவுப்பொருள்களை வரவழைக்கும் அதிகாரம் இல்லாத காரணத்தால், மாகாணசர்க்கார் மத்தியசர்க்காருக்கு வேண்டுகோள் விடுத்தது. வேதனைப் படுகிறார்கள் மக்கள் உணவுப்பொருளில்லாமையால், ஏற்பாடு செய்யுங்கள் என்பதாக!

வெளிநாட்டிலிருந்து உணவுதானியங்களை இறக்குமதி செய்யாமலில்லை இந்திய சர்க்கார்! எனினும் ஐக்கிய மாகாணத்தில் மீந்துபோன மோசமான அரிசியை அனுப்பியிருக்கின்றனர்; டன் கணக்கில்! "இவ்வளவு விலைகொடுத்து வாங்கியும், அந்த அரிசியின் தரம் மோசமாக இருப்பது சர்க்காருக்குத் தெரியவருமா" என்று பேகம் அமீருத்தீன் கேட்டிருக்கிறார். அதற்குக் கனம் மந்திரியார் "ஆமாம், இதுபோன்ற புகார்கள் பல வந்திருக்கின்றன" என்று பதில் தந்துள்ளார்.

இந்தியா—ஒரேநாடு, எல்லோரும் இந்திய மக்கள் என்று வானளாவப் பேசப்படுகிறது—ஆனால் ஒரு மாகாணம், இன்னொரு மாகாணத்திற்குத் தனது பொருளை ஏராளமான லாபம் வைத்து விற்பதில்தான் குறியாயிருக்கிறது. இந்த நடவடிக்கைக்கு மத்திய சர்க்காரும் ஒத்துழைக்கிறது.

வயிற்று வலியால் வேண்டுகோள் விடுத்த நண்பனுக்கு வடை வாங்கி வந்தானே அதுபோல, இந்திய சர்க்கார் ஐக்கிய மாகாணத்திடமிருந்து அதிகவிலைக்கு மோசமான அரிசியை வாங்கி அனுப்பிவைத்திருக்கின்றனர். இத்தகவலை வெளியிட்டுவிட்டு உணவு மந்திரி ரோச். விக்டோரியா, 'ஏமாந்து தான் விட்டோம். இனிமேல் ஜாக்கிரதையாக இருக்கிறோம்' என்று பரிதாபமாகப் பதில் தந்திருக்கிறார். நிதி மந்திரி கோபால ரெட்டி, "விட்டேனா பாருங்கள்! நமக்கேற்பட்ட நஷ்டத்தை ஈடுசெய்யுமாறு மத்திய சர்க்காரைக் கேட்கப் போகிறேன்... ஏற்கனவே கடிதம் எழுதியுள்ளேன் அவர்களுக்கு!" என்று வீரத்துடன் கூறியிருக்கிறார்.

வீரமும் சோகமும் மந்திரிமார்களுக்கு—நமக்கோ வேதனையும் கவலையும்!

அங்கிருந்து அந்தஅரிசி நேராகத் திருச்சிக்கு அனுப்பப்பட்டதாம். திருச்சி, தஞ்சைக்கு அருகிலுள்ள ஊர். தஞ்சை மாவட்டம்—மாகாணத்தின் நெற்களஞ்சியம். உணவு உற்பத்தியிலும் முதலிடம் வகிக்கிறது—அருகிலுள்ள பிரதேசத்திலிருந்த அரிசியை பக்கத்திலுள்ள திருச்சிக்கு அனுப்பினால் சிரமும் குறையும், செலவும் கொஞ்சமாகும். ஏனோ இந்த எண்ணம் ஆளவந்தார்மனதில் படவில்லை — ஐக்கிய மாகாணத்தில்

ருந்துவந்த அரிசியை அனுப்பியிருக்கின்றனர் திருச்சிக்கு. அது திருச்சிக்குப் போய்ச்சேர ஆகும் ரயில்வே செலவு, காலதாமதம் எல்லாம் ஏராளம்! இருந்தும் ஒரு மூலையிலிருந்து இன்னொரு மூலைக்கு அனுப்ப எண்ணமிருந்திருக்கிறதேயொழிய, எது சுலபம்—எது வசதியானது என்பது பற்றிய நினைவு ஆளவந்தாருக்குத் தோன்றவில்லை! சென்னைக்கு வடக்கிலுள்ள ஆந்திரப்பிரதேசத்திலும் உணவுப்பற்றுக்குறை—தானியங்கள் வேண்டும் என்ற நிலைமை தான். ஐக்கிய மாகாணத்திலிருந்து ஆந்திராவுக்கு அரிசி வந்துசேர அதிகச்செலவு ஆகிவிடாது. ஆனால் மாகாண சர்க்காரோ திருச்சிக்கு ஐக்கியமாகாண அரிசியை அனுப்பிவிட்டு ஆந்திரப் பிரதேசங்களுக்குத் தெற்கிலிருந்து உணவுத் தானியங்களை அனுப்புகின்றனர். இதற்கு ஆகும் செலவு—மக்கள் தலையில்தான் சுமத்தப்படுகிறது.

X X X

ஆளவந்தார்மீது நாம் குறை கூறுகிறோம்—காரணம், சாதாரண ஏற்பாடுகளைக்கூடச் சரிவரச் செய்வதில்லை.

திறமையில்லையென்று கூடக் குற்றம் சாட்ட நாம் விரும்பவில்லை—அவ்வளவு அசிரத்தை வளர்ந்திருக்கிறது. ஊர் சுற்றுவது, பிரசங்கம் செய்வது, எதிர்க்கட்சிகளைத் தூற்றுவது, எப்போதாவது சட்டசபையை எட்டிப்பார்ப்பது — இது தான் மந்திரிமார்களின் சேவையாக இருக்கிறது. மக்களைப்பாதிக்கும் பிரச்னைகளில் அவர்கள் கவனம் செல்லவில்லை—திரும்பவில்லை!

X X X

"காலா காலத்தில் கவனிக்காது, அதுபோது தூங்கிக்கிடந்துவிட்டுத் தப்பும் தவறுமான அறிக்கைகளைவிட மட்டும் இப்போது சர்க்கார்முன் வந்திருக்கிறது." இதுபோலச் சென்னை மாகாணச் சர்க்காருக்குப் 'பாராட்டு' தந்திருக்கிறார், இந்திய சட்டசபை உறுப்பினரான தோழர் எல். கிருஷ்ணசாமி பாரதி. அவர் காங்கிரஸ்காரர் — அவரிடமிருந்துதான் இந்தப் பாராட்டுகிடைத்திருக்கிறது இம்மாகாணச் சர்க்காருக்கு!

திருவாங்கூர்-கொச்சிசமஸ்தானங்களுக்குக்கட்டுப்பட்ட ஆறு கிராமங்கள் — சென்னை மாகாணத்திற்குள் "திட்டுப்பிரதேசங்களாக" இருந்தன. உதிரியாகக்கிடந்த இந்தக் கிராமங்களின் மொத்தப் பரப்பு 28 மைல்.

இதுபோல இன்னொரு பிரதேசத்துக்குள் அமைந்துகிடக்கும் சிறு சிறு இடங்களை முறையே அந்தச் சர்க்கார்கள் கவனித்து ஏற்பாடு செய்யவேண்டும் என்று மத்திய சர்க்கார் தாக்கீது அனுப்பியிருந்தனர்.

இதையொட்டி ஐக்கிய மாகாணத்துக்குள்ளிருந்த, விந்திய பிரதேசத்துக்குக் கட்டுப்பட்ட **489** "திட்டுக்கிராமங்கள்" ஐக்கியமாகாணத்தில் சேர்க்கப்பட்டன.

"மத்திய பாரத்"துக்கு, மத்திய மாகாணத்துக்குள்ளிருந்த 44 திட்டுக்கிராமங்கள் உரிமையாக்கப்பட்டன.

தனது பிரதேசத்துக்குள் கிடக்கும் திட்டுப்பிரதேசங்களை முறையே அந்தந்த மாகாணங்கள் தங்களைச் சேர்ந்தவையாக ஆக்கிக் கொண்டுள்ளன.

ஆனால் நம்மசர்க்காரோ, சென்னை மாகாணத்துக்குள் கிடக்கும் 67 பெரிய திட்டுக் கிராமங்களை மைசூருக்கும், 6 திட்டுக் கிராமங்களை திருவாங்கூர் சமஸ்தானத்திற்கும் 'தத்தம்' செய்திருக்கிறது. இந்தத் திட்டுப் பிரதேசங்களில் வாழும் மக்கள் பேசும் மொழி, வாழும் வகை இவைகளை வைத்துப் பார்த்தால், இவை சென்னையுடன் சேர்க்கப்பட்டாக வேண்டியவைதான்.

எனினும், இவைகளைத் தாராள மனதுடன் சமஸ்தானங்களுக்குக் கொடுத்திருக்கிறது—அந்த அளவுக்கு 'நிர்வாக சூட்சமம்' நிலவுகிறது, நமது மந்திரிகளிடையே!

சென்னை சர்க்கார் ஏமாந்துவிட்டனர், ஏன் இவைகளைத் தத்தம் செய்திருக்கவேண்டும், கவனக்குறைவா அல்லது விஷயம் தெரியாததன் விளைவா—இதுபோன்ற கண்டனங்கள் பத்திரிகைகளாலும் பொறுப்புள்ள பலராலும் எழுப்பப்பட்டபின், தூங்கிக் கிடந்தவனைத் தட்டி எழுப்பியதும் வேகமாக எழுந்து உட்கார்வது போல 'அறிக்கைகளை விட்டது'—தங்கள் நடவடிக்கைகளை விளக்கி!

இந்த அறிக்கை "தப்பிப்பிர

யத்தை உண்டு பண்ணுவது, நியாயமில்லாதது, பொதுமக்களைத் திருப்தி செய்யமுடியாது" என்று விளக்குகிறார், தோழர் கிருஷ்ணசாமி பாரதி.

ஆட்டிப் படைக்கும் மத்திய சர்க்கார், வயிற்று வலிக்கு வடைவாங்கித் தரும் நண்பன் போல இருக்கிறது. மாகாணத்தையாளும் நம்மவரோ, காசைக்கொடுத்துக் கஷ்டம் தேடும் 'தனவான்'களாக இருக்கின்றனர்.

ஒருகோடியே எட்டாயிரம் ரூபாய் —வாங்கிய பொருளின் விலையல்ல, அதிகமாகக் கொடுத்த அநாவசியத் தொகை! நம்முடைய பணம், கண்ணீர் சிந்தி நாம் கொடுத்த பணம், ஐக்கிய மாகாணத்திற்குச் செல்கிறது —அதற்கு அனுசரணையாக இருக்கிறது, இந்திய சர்க்கார்—வடநாட்டுத் தலைவர்கள் அமர்ந்திருக்கும் இடம்!

இதுதான் முதல்முறையென்பதல்ல—சர்க்கரைப் பஞ்சம்கூட ஐக்கிய மாகாண சர்க்காரின் போக்கால் ஏற்பட்டதுதான். அப்போதும், இந்திய சர்க்கார் போதுமான நடவடிக்கைகள் எடுக்கத் தவறிவிட்டனர். ஜாவா முதலிய வெளிநாடுகளிலிருந்து பல மடங்கு குறைந்த விலையில் சர்க்கரை கிடைப்பதாக இருந்துங்கூட, நாமெல்லாம் அதிகவிலை கொடுத்து ஐக்கிய மாகாணத்துச் சர்க்கரையை வாங்கி அவதிப்பட்டுத் துடித்தோம்!

ஏக இந்தியா என்று முழக்கமிடும் டெல்லி சர்க்கார் ஒரு மாகாணத்திலிருந்து, இன்னொருமாகாணத்துக்கு "இலாபம்" சம்பாதித்துத்தருகிறது.

இவர்களோ, இந்தியா நமது நாடு, எல்லாரும் பாரதமக்கள் என்றெண்ணிக்கொண்டு ஏழைகளின் பணத்தை வீணாக்குகின்றனர்—தெரிந்தல்ல, விஷயம் உணராத காரணத்தால்!

'நமது மாகாணம், நமதுநாடு இங்குள்ளோர் நலனே நமது அக்கரை' ஆளவந்தாரிடையே இல்லை; அசிரத்தை இருக்கிறது! சேரவேண்டிய 'திட்டுப்பிரதேசங்களை' "கோட்டை" விட்டு விட்டுப்பின் சமாதானங்கள் கூறப்படுகின்றன!

எத்தனுகிய நண்பன்—அவனோடு உறவு நீடிக்க வேண்டும் என்ற எண்

(அடுத்த பக்கத்தில்)

# நமது வாழ்த்து

"நானும் தோழியர் விசாலாட்சியும் வாழ்க்கை ஒப்பந்தம் செய்துகொண்டதை யொட்டி, இந்த விருந்துக்கு யாவரையும் வருமாறு வேண்டிக்கொண்டோம். வந்து எங்கள் மகிழ்ச்சிக்கு மதிப்பளித்த யாவருக்கும் எங்கள் நன்றி" என்று நண்பர், திராவிட முன்னேற்றக் கழகப் பிரச்சாரக் குழுச் செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டார்.

குழுமியிருந்த இயக்கத் தோழர்கள், நண்பர்கள், மாற்றுக் கட்சிப் பிரமுகர்கள், சர்க்கார் அதிகாரிகள், பத்திரிகாசிரியர்கள் எல்லாரும் தங்கள் மகிழ்ச்சியைத் கைதட்டி அதன் மூலம் எதிரொலித்தனர், 10—4—50 திங்கட்கிழமை யன்று சென்னையில்!

✻

கவனியுங்கள் என்று கூறினார், என் நண்பர் — மணமக்களிருவரும் வந்து அமர்ந்தபோது. மேளதாளமில்லை, வீண் சடங்கு எதுவும் கிடையாது, ஆடம்பர ஜோடிப்பு அங்கில்லை — புதுமுறை அங்கு 'பூத்து'க் குலுங்கியது! தலைவர், பிரசங்கங்கள், கூடக்கிடையாது!

பந்தல் முழுதும் போடப்பட்டிருந்த நாற்காலிகளில் நண்பர்களும், உறவினர்களும் அமர்ந்திருந்தனர். திருமணத்தைப் பதிவுசெய்து சட்ட பூர்வமானதாக்கும் சர்க்கார் அதிகாரி—ரிஜிஸ்டிரார் வந்தார்.

'நாங்களிருவரும் வாழ்க்கைத் துணைவர்களாகிறோம்' என்று புதுவாழ்வு புகும் தம்பதிகளிருவரும் தெரிவித்துத் 'திருமணப் பத்திரத்தில்கையெழுத்திட்டனர். மணமகன் நெடுஞ்செழியனும், மணமகள் விசாலாட்சியும் குழுமியிருந்த பொதுமக்கள் முன், தங்கள் 'திருமண உறுதி'யைப் படித்த காட்சி—கண்கொள்ளாததாக மட்டுமல்ல, கருத்தையும் கவர்ந்தது!

"இந்து — பகுத்தறிவுவாதியாகிய நான்....." என்று அவர்கள் கூற வில்லை, "எந்த மதத்தையும் சாராதவனாகிய நான்" என்று நண்பர் தெரிவித்தார் — துணைவரைப்போலவே துணைவியாரும் வெளியிட்டார் 'எம்மதத்தையும் சேராத நான்......' என்பதாக!

"இவரை என் துணைவராக யேற்கும் மகிழ்ச்சித் திருநாளின் அறிகுறியாக இம் மோதிரத்தை அவருக்கு அணிவிக்கிறேன்" என்று மணமகள் டாக்டர் விசாலாட்சி தெரிவித்து, மணகன் கையில் அணிவிக்க, மகிழ்ச்சியுடன் நண்பர் நெடுஞ்செழியன் "இவரை என் துணைவியாக ஏற்ற இம்மகிழ்ச்சி நாளில் என் அன்பின் சின்னமாக இப்பொன் சங்கிலியை அணிவிக்கிறேன்" என்று கூறி அணிவித்தார்.

26—3—50 ஞாயிறு அன்று காலை சேலத்தில் நடைபெற்ற இத் திருமணக் காட்சி, **10—4—50** மணமக்கள் அளித்த "இன்சுவை விருந்தின்போது" அவர்கள் ஓடியாடி நண்பர்களை உபசரித்தபோது, நினைவில் எழும்பியது!

✻

"பரந்துகிடக்கும் வானத்தை அழகுசெய்ய ஒரு முழு நிலா!" என்றார் பக்கத்திலிருந்த பத்திரிகாசிரியர் ஒருவர்.

"நாட்டின் நல்வாழ்வுக்குப் பாடுபடும் செயல்வீரருக்கு நாட்டின் நலிவைத் துடைக்கச் சேவை செய்யும் தோழியர் துணைவி!" என்றார் மகிழ்ச்சியுடன் ஒரு கழகத்தோழர்.

"அருமையான பொருத்தம்..." என்றார் ஒரு அதிகாரி.

நமது இதயம் ஒருமுறை பூரிப்பால் விம்மி எழுந்தது!

X X X

வாழ்க்கைப்பாதையில் கைகோர்த்துப் புறப்பட்டுவிட்ட மணமக்களிருவரும், வளரும் உலகின்சின்னங்கள்! மறுமலர்ச்சி வாழ்வின் பிம்பங்கள்!

"வாழ்க அவர்கள்! வளர்க அவர்கள் சேவை!" என்று புதுவாழ்வு புகுந்த மணமக்களுக்கு நமது மகிழ்ச்சி கலந்த வாழ்த்துக்களைக் குவிக்கிறோம்!

(தம்பதிகளை அட்டைப் படத்தில் காண்க.)

✻

(முன் பக்கத் தொடர்ச்சி)

ணம்—தன் காரியத்தைத்தானே கவனித்துக்கொள்ளும் திறமையில்லாமை நமது மாகாண சர்க்காரின் 'மதிப்பிலாக்' குணங்கள்.

இந்த 'மதிப்பிலாமாணிக்கங்களின்' போக்கால் நாடு அவதிப்படுகிறது, மக்கள் மனத்துயர் தாங்காது துடிக்கிறார்கள்.

நன்மைகளைச் செய்ய வழிவகையில்லையென்று 'முகாரி' பாடும் ஆளவந்தார் இருப்பதையும் இழந்து, தாங்களும் அவலிப்படுவதோடு, மக்களையும் அவதிக்காளாக்குகிறார்கள்.

அசிரத்தை 'பதவிப்பீடம் ஏறிவிட்ட' அவர்களுக்கு ஒரு பொழுதுபோக்கு! நமக்கோ உயிரின் வாதை

—✻—


## வேண்டுகோள்

—✻—

" திராவிட நாடு " ஜாமீனுக்கென கட்டிய 3000-த்தையும் பெற்றுக் கொள்ளுமாறு சர்க்காரிடமிருந்து உத்தரவு வந்துவிட்டது.

இன்னும் ஓரிருவாரங்களில், உதவியோருக்கு, முன்பு அறிவித்தபடி பணத்தை அனுப்பிவைக்க முடிவு செய்துள்ளோம். எனவே, சமயத்தில் உதவி செய்த நண்பர்கள், உடனடியாக பணம் அனுப்பவேண்டிய முகவரியையும், தொகையையும் குறிப்பிட்டுத் தகவல் தருமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

**நிர்வாகி,**

திராவிடநாடு நிலையம்,

காஞ்சிபுரம்.

# சிவப்பாகும் ஆசியா

தென் கிழக்கு ஆசியா — இன்று புரிய முடியாத புதிர்! உலகில வளர்ந்துவரும் கம்யூனிசத்தின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் "இடம்" தென்கிழக்கு ஆசிய நாடுகள் தான் என்று மேற்கத்திய அரசியல் வாதிகள் கருதுகின்றனா; நிலைமையும் அப்படித்தான் காட்சியளிக்கிறது. இரண்டாவது உலகப் போரின் விளைவாக இந்தியா, பாகிஸ்தான், இந்தோனேஷியா, பர்மா, இலங்கை முதலிய நாடுகள் புதிதாகச் சுதந்திரம்பெற்றவை. இந்த நாடுகளை இன்று ஆளும் கட்சியினர்— நீண்ட காலம் சுதந்திரக் கிளர்ச்சியிலீடுபட்டவர்கள், ஆட்சியாளரை எதிர்த்துப் போராடிக்கொண்டிருந்தவர்கள்! எனவே, இந்த நாடுகளின் அரசாங்கங்கள் இன்று — சூறுவளியில் சிக்கிய படகுபோல் தத்தளிக்கின்றன. புதுப் புது பிரச்னைகள் 'பூகம்பம்' போல எழுந்து, ஆட்டிப் படைக்கின்றன. போரின் விளைவால் சிதைந்து சீர்கெட்டுக் கிடக்கும் பொருளாதார நிலை—ஆட்சிப்பீடம் அமர்ந்தோரை ஆட்டிப்படைக்கும் புதுச் சிக்கல்!

கோடிக்கணக்கான விவசாயிகளின் வாழ்வில் குமுறல், இலட்சோபலட்சம் தொழிலாளர்களின் வேதனைக்கீதம், வாழமுடியாது தத்தளிக்கும் பாமரமக்களின் பஞ்சநாதம், தென் கிழக்காசிய நாடுகளில் கம்யூனிசக் கொள்கைக்குக் கதவைத் திறந்து வைக்கின்றன!

கம்யூனிச வளர்ச்சி, இந்த நாடுகளின் ஆட்சியாளர்களைத் திக்கித் திண்டாடச் செய்கிறது. பொதுவுடைமைக் கொள்கைகள் பரவும் வேகத்தைக்காணும் மேற்கத்திய முதலாளித்துவம் தென்கிழக்காசியாவை, வசிகரச் சொல்லால் வளைக்க முயன்று வருகிறது.

இந்நிலையில் தென் கிழக்காசியாவைச்சேர்ந்த சில நாடுகளின் நிலை...

## சீனு

ஆசியாவின் இரண்டு கண்களில் ஒன்று, உலகிலேயே அதிகமான மக்கள் தொகைகொண்ட நாடு. வாழும் 47 கோடிமக்களில் பெரும் பாலோர், விவசாயிகள். பழமையும், ஏழ்மையும் நர்த்தனமாடும் இந்நாடு கிட்டத்தட்ட கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்துக்கு வந்துவிட்டது இந்நாடு கிழக்கே சமுத்திரம்; மற்ற திசைகளில் நீண்ட மலைகள், பாலைவனங்கள் சூழ்ந்தது. இதன் நிலப் பரப்பில் 60 சதவிகிதம் மலையும் பீடபூமியும்; 26 சதவிகிதம் சமவெளிப் பிரதேசம்; 10 சத விகிதம் புல்தரை வெளி

இங்கு பழைமையான கன்பூஷியஸ், லாவோ என்றோர் போதித்த மதம், பத்மதம், தவிர முஸ்லீட்கள் ஐந்துகோடியும் பதினறு இலட்சம் கிருஸ்தவரும் இருக்கின்றனர்.

கோதுமை, அரிசி, உருளைக் கிழங்கு, பருத்தி தேயிலை—சீனவின் முக்கிய விளைபொருள்கள்.

பட்டுப்பூச்சி வளர்த்தல்—பழைமையான தொழில். நிலக்கரி, இரும்பு பெட்ரோல் சீனவில் கிடைக்கும் முக்கியபொருள்கள்.

சிவப்பு மயமாகிவிட்ட சீன, ஆசியாவின் எதிர்காலத்தையே மாற்றும் முக்கிய நிலையிலிருக்கிறது. ரஷ்ய ஆதரவு உள்ள இந்நாட்டுச் சர்க்கார், அமெரிக்க முதலாளித்துவத்திற்கு ஆசியாவில் ஏற்பட்டுள்ள பெரிய தலைவலியாகும்!

## இந்தோ—சைனு

இரண்டரை கோடி மக்கள் தொகையைக்கொண்ட இந்நாடு பிரெஞ்சு ஆதிக்கத்துக்கு உட்பட்டதாகும். கடந்த போருக்குப் பின் விடுதலைக் கிளர்ச்சி வலுத்து 'வியட்—நாம்' என்ற குடியரசு, அன்னும் — டாங்கிங் பகுதிகளில் ஏற்பட்டது. கோச்சின்சைன, கம்போடியா, லவோஸ், அன்னும், டாங்கிங், என்ற ஐந்து பகுதிகள் அடங்கியது இந்நாடு. இந்தோ சீன பல இனத்தவர் வாழும் நாடு. ஒரு நூற்றாண்டுக்கு முன் வியாபார நிமித்தம் நுழைந்த பிரெஞ்சுக்காரர்கள், இந்நாட்டின் ஆளவந்தாராக எண்பது ஆண்டுகளுக்கு முன் பீடமேறினர். ஆதிமுதல், ஆட்சிப்பீடம் அமர்ந்தோருக்கும் மக்களுக்குமிடையே நல்லுறவு இருந்ததில்லை. முதன் முதல் அந்நிய ஆட்சியை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து உயிரைத் தத்தம்செய்தவர் பான்-தின்-புங் என்ற வீரர். அதற்குப் பின் ஹாங்ஹோ—தான் என்பவர் கொரில்லாப் படைகளைத் திரட்டி பிரெஞ்சு ஏகாதிபத்தியத்தை எதிர்த்தார். இவரும் 1912-ல் படுகொலை செய்யப்பட்டார். பின் சுதந்திர உணர்ச்சி, லுவாங்-கெய் சிய் என்பவர் தலைமையில் சீர்திருத்த இயக்கமாக வளர்ந்தது. அவரும்: ராஜத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு, ஜப்பானுக்கு விரட்டப்பட்டார்! பின்னர் தலைமை தாங்கி தற்போது சுதந்திரக்கிளர்ச்சியை நடத்துபவர் ஹோ-சிமின்.

வியட்நாம்—(அன்னும், டாங்கிங்) கடலருகாமையிலுள்ள பிரதேசம். இந்தப் பிரதேசத்தை ஜப்பானியர் வசமிருந்து அன்னமியர் 1945-செப்டம்பரில் மீட்டு தங்கள் வசமாக்கினர். போர் முடிந்ததும், பலமிழந்த பிரெஞ்சு ஆதிபத்தியம் முன்பு தன் வசமிருந்த காலனிகளில் தன் ஆட்சியை நடத்த விரும்பியது. இதன் விளைவாக வியட்நாமியருக்கும்—பிரெஞ்சுக்காரருக்குமிடையேபேச்சு வார்த்தைகள் நடைபெற்று முடிவில் ஹோ-சி-மின் தலைமையில் 1946-டிசம்பர் 19-ந்தேதி வியட்நாம் குடியரசு உதயமாயிற்று. அந்நாள்முதல் வியட்நாமைத் திரும்பப்பெற பிரெஞ்சுக்காரர் முயல்வதும், அதை வியட்நாமியர் எதிர்ப்பதுமான உள்நாட்டுப்போர் உருவாயிற்று. பிரான்ஸ் ஆதிக்கவெறியுடன், ஒப்பந்தங்களையெல்லாம் மீறி லட்சக்கணக்கான துருப்புகளையும் ஆயுதத்தளவாடங்களையும் கொண்டு வந்து குவித்தது. எனினும் விடுதலைக் கிளர்ச்சியை நசுக்க முடியவில்லை!

நாட்டைத் தங்கள் இரத்தம் சிந்தி மீட்ட வியட்நாம் மக்களின் வீரத்தை, மதிப்பிழந்த பிரான்ஸ் மதிக்கவில்லை. எனவே சூழ்ச்சி நினைவுடன் அன்னும் பிரதேசத்தின் முன்னுள் மன்னரான பாவோடாய் என்பவரை அழைத்து வந்து முடிசூட்டி,

(5-ம் பக்கம் பார்க்க)

தொடர் கதை

# மணப் போர்

வில்லாளன்.

நீலனை ஏற்பதானாலும், வேலனை மணம் முடிப்பதானாலும் ஒரு பெரிய போர் நடத்தியே ஆகவேண்டும்... அப்படியிருக்க கொள்கையிலே பிடிப்பில்லாதவனோடு நின்று இலட்சியப் போராட்டத்தை நடத்த முடியுமா? காதல் பாதை பயங்கரமான பாதை. அதில் நடக்க எதையும் இலட்சியம் செய்யாத வீரனின் துணை தேவை பெண்ணுக்கு! இந்த மழுப்பல் ஆசாமியுடன் துணிந்து அதில் பயணத்தைத் தொடங்கி இடையில் அவன் ஓடி விட்டால் வேறு யார் துணை வருவார்கள்? துணை தான் கிடைக்குமா?

அன்று முழுவதும் அவள் அதே சிந்தனையாகவே இருந்தாள். அவள் எப்பொழுது மாலை வரும் என்று எதிர்பார்த்திருந்தாள். மணி ஐந்தடித்ததுமே வீட்டிற்குப் புறப்பட்டு விட்டாள்.

உள்ளே நுழைந்ததுமே அவளது தந்தை டேவிட் அவளை வரவேற்றார்

"அம்மா, 'காபி' சாப்பிட்டுவிட்டு வா......உன்னோடு சில வார்த்தைகள் பேசவேண்டும்" என்றார் அமைதியாக!

அவளுக்கு ஒன்றும் புரியவில்லை "காபி'யைக் கூடச் சரியாகக் குடிக்காமல் பாதியை வைத்துவிட்டு கைக்குட்டையால் வாயைத் துடைத்துக் கொண்டு தந்தையிடம் வந்தாள்.

"இப்படி உட்காரம்மா......"

என்றார் அன்போடு.

பிறகும் அவரே பேசினார்......

"லில்லி...நீ எனக்கு ஒரே மகள்... தாயிழந்த உன்னை அன்போடு வளர்த்தேன். படிக்கவைத்தேன். பணியும் செய்து உன்னையே காப்பாற்றிக்கொள்ளும் அளவு தகுதியும் பெற்றுவிட்டாய்...ஆனால்"

"என்னப்பா, இன்று புதுமாதிரி பேசுகிறீர்களே......!"

"லில்லி......உன்னை இன்னமும் தனியாக வைத்திருக்க விருப்பமில்லை. தக்கதோர் வாலிபனின் ஆதரவிலே வைக்க முடிவு செய்து விட்டேன்!"

"திருமணமா......?"

அவள் தலை சுழன்றது. மண்டையில் குண்டு பாய்ந்து குடைவது போல இருந்தது......அவள் கண்கள் மூடிக்கொண்டன. அவள் கரங்கள் அவளது தொங்கிய தலையைத் தாங்கிக்கொண்டன, கன்னங்களைப் பிடிப்பாகக்கொண்டு!

"லில்லி...மணம் என்றவுடன் மயக்கமா? உனக்கு இப்பொழுது மணம் செய்து கொள்ள விருப்பமில்லையா அம்மா........உன்மனங் கோணும்படி நான் நடக்கமாட்டேன். பயப்படாதே!"

"ஆம் அப்பா இப்பொழுது எனக்கு அந்தவாழ்க்கையில் விருப்பமில்லை"

"அப்படியானால் சரி......ஆனால் சொல்ல நினைத்ததைச் சொல்லி விடுகிறேன். வாரன்ஸ் மகன் எட்வர்டு தெரியுமல்லவா உனக்கு......இந்த ஆண்டுதான் எம் பி. பி. எஸ்...... தேர்விலே முதல்வனாகத் தேறியிருக்கிறான். அவனுக்காக அவர் தந்தையே என்னிடம் வந்தார். அவன் உன்னை விரும்புகிறானாம்......!"

அவள் சிந்தனை ஆற்றுச்சுழல் போலாகிவிட்டது.

நீலன், வேலன், எட்வர்டு........ போட்டிக்கார உலகம், போக்கிரித்தனமாக பந்தயம் வைக்கிறது! ஒருவனுக்கு அவளின் பழக்கம் ஆதாரம், மற்றவனுக்கு அவனது உள்ளத்திலே வளர்ந்து வந்த ஆசை, இலட்சியக்கனவு துணை, மற்றொருவனுக்கு அவளின் தந்தையே சிபார்சு செய்கிறார்......லில்லியின் மனம் இன்னமும் வெடிக்கவில்லையே! அவளுக்குப் பித்து பிடித்துவிட்டால் கூட ஆச்சர்யப்பட முடியாதே!

லில்லி தந்தையிடம் விடை பெற்றுக்கொண்டுத் தன் அறைக்குச் சென்றாள். எழுதுகோலை எடுத்து கடிதம் எழுதவேண்டும் என்று உட்கார்ந்தாள்.........எழுதமுடிகிறதா என்ன! நீலன் வந்து நிற்கிறான் எதிரில்...வேலன் பரிதாபமாகப் பார்க்கிறான்......எட்வர்ட் அவர்கள் இருவரையும் சந்தேகத்தோடு பார்த்துவிட்டு அவளை எரித்து விடுவது போல கோபக்கனலைக் கக்குகிறான். யாருக்கு கடிதம் எழுதுவாள்?

எண்ணங்கள் மகா கள்ளர்கள் ......அவர்கள் நம்மையுமறியாமல் நமது இரகசிய அறையாகிய மனத்தில் புகுந்து சிந்தனைப் பெட்டியில் பூட்டிவைத்துள்ள நினைவு என்ற விலை மதிக்கமுடியாத பொருளை எடுத்துக்கொண்டு ஓடிவிடுவார்கள்! லில்லி நினைவிழந்தே விட்டாள்...... இல்லாவிட்டால் பேனாவும் கையுமாக அப்படி அசைவற்றிருப்பாளா? வெகு நேரம் அப்படியே இருந்துவிட்டாள். பிறகு திடுக்கிட்டு எழுந்தாள். உடனே ஒரு கடிதம் எழுதினாள். நீலனை வரவேண்டாம் என்று கண்டிப்பாகச்சொல்லும் பாணியில்! எழுதி விட்டாள்...பிறகு பரிதாபத்திற்குரிய வேலனுக்கு எழுதலாம் என்று எண்ணினாள். எதை எழுதுவது, என்ன எழுதுவது...சிந்தித்தாள். பிறகு எழுதலாம் என்று அவனுக்கு எழுதவில்லை. வேலன் எதிர்பார்த்து, எதிர்பார்த்து ஏக்கத்தால் வாடமாட்டானா! அது ஏன் அவளுக்குத் தெரியவில்லை?

## போர்

கடைசியில் பாக்கியத்திற்கு ஒரு கடிதம் வரைந்தாள்......தோழியே ........என்மனம் சரியான நிலையி

வில்லை. ஆறுதல் மொழி கூறக்கூட ஆளில்லை. உனக்கு இரண்டுதிங்கள் ஓய்வுகிடைக்கும் என்று சொல்லியிருந்தாயே! அதை இப்பொழுது எடுத்துக்கொண்டு என்னிடம் வந்திருக்க வேண்டிக் கொள்கிறேன்... தனியாக அல்ல, உன் அன்பர் சேரனுடன்! நேரில் உன் கேள்விகளுக்கு, சந்தேகங்களுக்கெல்லாம் விடை கிடைக்கும்" என்று எழுதிவிட்டாள்!

பாக்கியத்தின் கரங்களிலே அந்தக்கடிதம் வந்து சேர்ந்ததும் அவள் முகத்திலே களிப்புப் பொங்கிற்று! ......ஆம், தோழியின் அறிவுரை கிடைக்கும். அதுமட்டுமல்ல...பெண்களுக்கு ஒரு இயற்கையான மனப்பண்பு! சேலை வாங்கவேண்டுமென்றாலும்,நகைஎடுக்கவேண்டும்என்றாலும் ...ஐந்தாறு தோழிமாருடன்சென்று அவர்களின் பாராட்டுதல்களும், வாழ்த்தும் கிடைக்கக்கூடிய 'செலக்‌ஷன்' நடத்தினால்தான் திருப்தி பெண்மனம் என்ற விளக்கில், பிறர் பாராட்டுதல்கள் என்ற எண்ணெய் விடவிட ஒளி அதிகரிக்கும்! ஆகவே தன்காதலனை லில்லி பார்க்கவேண்டும், அவள் பாக்கியத்தின் கிடைத்தற்கரிய பாக்கியத்தை — சேரனை — புகழ்வதைக் கேட்டுப் பூரிக்கவேண்டும்......இப்படித் திட்டமிட்டாள். ஆகவே தன்னை மதுரையில் லில்லியின் இல்லத்திலே அவசியம் வந்து சந்திக்கவேண்டும் என்ற வேண்டுகோளை விடுத்தாள். பிறகு அன்றே ஓய்வுக்கு உத்தரவு வேண்டுமென்று எழுதிவிட்டாள்.

அன்று மாலை மருத்துவ மனையிலிருந்து பாக்கியம் திரும்பி வந்தவுடனேயே மிகக்குதூகலமாக தங்கம்மாவிடம் பேசத் தொடங்கினாள்...

"தங்கம்மா, என்னோடு ஊருக்கு வருகிறாயா?"

"நான் எதுக்கம்மா...அதற்கு கொடுத்து வைத்தவர்...ஊரிலே இருக்கிறார்!"

"யாரடி அம்மா அது, எனக்குத் தெரியாமல் உனக்குமட்டும் தெரிந்த புது மனிதர்"

"அவர் உங்கள் காதல் வீரர்... சே...ர...ன்"

"தங்கா...உனக்கு எப்பொழுதும் கேலிதான்...அவர்தான் என்னிடம் கோபித்துக்கொண்டு போய் விட்டாரே!"

தங்கம்மா ஆச்சர்யப் பட்டாள்' வேடிக்கையாகவேபேசுகிறாள் என்று எண்ணினாள். மேலும் வற்புறுத்திக் கேட்ட பிறகு நாணத்தோடு அவள் கூறிய வார்த்தைகளைக்கொண்டு பார்த்தால் சேரன் உண்மையில் கோபத்தோடுதான் போயிருப்பான்! அவனது ஆவித் துடிப்பை...உலக இன்பத்தின் உச்சிக்கு வா என்று வேண்டிய அன்பழைப்பை...ஆசையின் கட்டளையை...அன்பு முதிர்ச்சியின் வற்புறுத்துதலை...அவள் ஏன் மறுத்தாள்? அவன் கேட்டும் மறுத்துவிட்டது தவறல்லவா?

பாக்கியம் தவறு என்று ஒப்புக்கொள்ள மறுக்கிறாள். எவ்வளவோ போராட்டங்கள் நிகழ்த்த வேண்டுமாம் காதல் பாதையில்...முடிகள் உருண்டதுண்டாம், சிம்மாதனங்கள் ஆடியதுண்டாம், படை மோதல் ஏற்பட்டதுண்டாம், பிணமலைகள் குவிந்ததுண்டாம் ... காதலுக்காக, காதலிலே வெற்றியடைவதற்காக... சரித்திரம் சொல்கிறது! பாக்கியம் சேரனிடம் அத்தகைய பயங்கர நிகழ்ச்சிகளை எதிர்பார்க்கவில்லை. அவள் அவனிடம் கேட்டதெல்லாம் மனிதனாக இருக்கவேண்டும் என்பதுதான்! விலங்குகளாக மாறிவிடக்கூடாது என்பது அவளது அசைக்கக் கூடாத ஆசை, நம்பிக்கை...! பொறுமை வேண்டும் என்றாள். தவறு என்றுகூட வாதிக்கவில்லை தவனை கேட்டாள் அறவே மறுக்கவில்லை. ஆகட்டும், ஆனால் கொஞ்ச நாட்கள் தள்ளிவைப்போம் என்றாள், கடுமையான குரலில் அல்ல, கனிமொழியுடன்! இது கூடாதா, தவறா? காதலுக்காக இந்த வேண்டுகோளை நிறைவேற்ற முடியாதவன், வேறு எதைத்தான் செய்யப் போகிறான்? செய்ய முடியும்? மனத்திண்மையோடு எதையும் செய்யும் ஆற்றல் வேண்டும்! சேரனிடம் இல்லையா அந்த ஆற்றல்...இனியும் ஏற்படுத்திக் கொள்ள முடியாதா?

அப்படி நடந்துகொள்வது பாவம் என்று சொன்னாள் பாக்கியம்... கடைசியில்! தங்கம்மாவினால் ஒப்புக்கொள்ளவே முடியவில்லை. பாவம் என்று ஒன்றைச் சொல்லிவிட்டு அதைச் செய்யும் சூழ்நிலையிலேயே மனித சமுதாயத்தை வைத்திருப்பது எவ்வளவு கொடுமை...ஆலயந் தொழுவது சாலவும் நன்று, கோவில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம் என்று பழமொழிகள் நடமாடுகின்றன நாட்டில்...ஆனால் நேற்றுவரை ஆதித்திராவிடருக்குக் கதவடைப்பு கோவில்களில்! முறண்பட்ட நிலைமையில் வாழவைத்து விட்டது சமூகம். அந்தக் காலத்துக் கதைகளில் ஒரு பெண்ணைக் கொடுக்க முடியாது என்று சொல்வதற்குப் பதிலாக பல நிபந்தனைகளை சாதிப்பானும் அரசனாகிய தந்தை! ஓட்டைக் குடத்தால் கிணற்று நீரைக் காலி செய்தல், ஏழு கடல் தாண்டி பாம்பின் வாயிலுள்ள நாக இரத்தினத்தை எடுத்து வருதல், புலிப் பால் கொண்டுவரல், குதிரைக் கொம்பு கேட்டல்...! அப்படித்தான் சமூகம் மனித சமுதாயத்தைப் பார்த்துக் கேலி பேசுகிறது! ஒரு காரியத்தைச் செய்யும் சூழ்நிலையைப் படைத்துவிட்டு அதைச் செய்தால பாவம் என்று சொன்னால் விசித்து விசித்து அழத்தானே செய்கிறது நம் மனம் இந்த குணங்கெட்ட சமுகத்தைப் பார்த்து!

பாக்கியம் 'பாவம்' என்று சொல்லித் தடுத்துவிட்டாள்...அதுவரை அவள் கெட்டிக்காரி! அதுவும் தன்னை விரும்பி, மணக்க முடிவு செய்து வந்த காதலனையே தடுத்துவிட்டாள். அவளுக்கு உள்ளத்திலே கனிவிருந்தும் கண்டிப்பாக நடந்துகொண்டாள்.

ஆனால்...............கொஞ்சமும் தொடர்பற்றவர்களிடம் கூட மறுப்புக் கூற முடியாமல் மானத்தை இழந்த மங்கைமார்கள் எத்தனை பேர்' பண்ணையாரின் பாதகச் செயலால் பாழ்பட்டவர் கணக்கிலடங்குவரோ! தேயிலைத் தோட்டத்து முதலாளியின் சிந்தனைத் தித்திப்புக்கு எத்தனை இளம் இரத்தத் துளிகளின் கொதிப்பு! மில் சொந்தக்காரர்களின் கருணைக்காக தங்களைத் தத்தம் செய்யவேண்டிய அவசியத்திலே விடப்பட்ட அபலைகளின் பட்டியல் தரமுடியுமா?...... இவர்களை ஒதுக்கிவிட்டால் கூட தங்களின் வயிற்றுக்காக, வாழ்வையே முறித்துக்கொண்டு, அந்தி மயங்கிய நேரத்தில் சந்து, பொந்துகளில்... நாம் காணும் நிகழ்ச்சிகள் எவ்வளவு! அவர்களுக்குத் தெரியாதா தாங்கள் செய்வது பாவம் என்று...... தெரி

யாது என்று சொல்ல முடியாதே... சமூகத்தின் கண்களை கட்டிவிட்டுத் தானே இந்தக் காரியங்களில் இறங்க முற்படுகிறார்கள்......... இவைகள் நடைபெற வேண்டும் என்று அவர்கள் நினைப்பதிலிருந்தே அவர்கள் சமூகத்தின் திட்டம் தெரிந்தவர்கள் தானே என்று பொருள்...? பாவம் என்று தெரிந்தும் ஏன் செய்கிறார்கள்? அவர்கள் நரக உலகத்தில் குடியேற ஆசைப்படுகிறார்களா? இல்லையே, பாவத்தைச்செய்பவர்களும் தாங்களும் புண்ணிய உலகத்தில் குடியேறப் போவதாகத்தான் சொல்கிறார்கள்? உலகத்திலே யார்தான் ஒத்துக் கொள்கிறார்கள் தாங்கள் பாவிகள் என்று.... ஒத்துக்கொள்பவர்களும் எல்லாம் அவன் செயல் என்று குற்றத்தை 'அவன்' தலையிலேதான் போட்டுவிட்டுத் தப்பித்துக்கொள்கிறார்கள்!

திருடுவது பாவம்.........ஆனால் உயிரை, உண்ணவும் வழியில்லாமல் விடுவது பாவமல்லவா? அந்தப்பாவத்தைப்போக்க சமூகம் என்ன செய்துவிட்டது! அது பாவம், இது பாவம் என்று வேதாந்தம் பேசுகிறது......இதுபோதுமா?

## ஆச்சரிய சிலை

தங்கம்மா, அவள் பாவம் என்று சொன்னபோது திகைத்துவிட்டாள். திகைப்பு மாறுமுன் விகாரமாகச் சிரித்தாள். அந்த மூன்றெழுத்துக்கள்...பாவம்...இட்லர், முசோலினி டோஜோ, ஆகிய மூவரைவிட அதிகமாக உலகத்தை ஆட்டித்தான் வைக்கின்றன! அந்தச் சொல் எத்தனை வீரர்களைச் சோதாக்களாக்கிவிட்டது! எத்தனை கடமையுணர்ச்சி உள்ளவர்களையும் கையாலாகாதவர்களாகிவிட்டது! செய்யவேண்டியது என்று மனச்சாட்சி சொன்னாலும் செய்யாது திகைக்க வைக்கப்பட்டவர் எவ்வளவுபேர்! ஆம், 'பாவம்' செய்த பாவம் எடுத்துச் சொல்ல முடியாத அளவு விரிந்துவிட்டது.

பாக்கியத்தின் உரையாடல் தங்கம்மாவின் அந்த நாள் வாழ்க்கைக் குப்பையைக் கிளறி விட்டுவிட்டது. சிந்தனைக்கோழி, எண்ணக்குஞ்சுகளுடன் அந்தக் குப்பையிலேயே மேயத்தொடங்கிவிட்டது. அதனால் தான், அவள் அப்படிச் சிரித்தாள்.

"தங்கா, ஏன் சிரிக்கிறாய்?"

"சிரிக்காமல் என்ன செய்வது...? அழுகையை மறைக்கவேண்டுமானால் சிரிப்புதானே ஏற்றபடுதா......? என்றாள்.

"ஏன் அழவேண்டும்?"

"அழப் பிறந்தவள், அழுகிப் போகப்பிறந்தவள் நான்!"

"தங்கம்மா...நீ மிகவும் துன்பப்படுகிறாய் என்று தெரிகிறது அதைக் கிளற நான் ஆசைப்படவில்லை!...... நீ என்னுடன் வருகிறாயா என்றுமட்டும் சொல்லு"

"எந்த ஊருக்கு அம்மா!"

"மதுரைக்கு......"

மதுரை......அந்தப் பெயரைக் கேட்டபோது அவள் முகத்தின் விகாரம் கிடு கிடுவென உச்சியை அடைந்துவிட்டது! ஆம், அந்த உணர்ச்சிவேகத்தைத்தடுத்து அணை போட முடியவில்லை. ஆகவேதான் அவள் கண்களிலே நீர் வடிந்ததைத் துடைக்கவுமில்லை. பாக்கியம் பயந்து போய்விட்டாள். பரிதாபம் வேறு பற்றிக்கொண்டது!

"தங்கம்மா...நீ ஆச்சர்ய சிலை போலவே இருக்கிறாய். எதைக்கேட்டாலும் சொல்வதில்லை. ஆனால் அனுபவமுத்திரைமட்டும் உன்முகத்தில் பொலிகிறது. நீ ஏன் அழுகிறாய்? சொல்லமுடியுமானால், சொல்லக் கூடியதானால் என்னிடம் சொல்!"

தங்கம்மா சிரித்தாள் முதலில்... அழுதாள், இடையில்......இப்பொழுதோ மீண்டும் சிரித்தாள்! பாக்கியத்தின் முகவாட்டமும் ஒட்டம்பிடித்துவிட்டது! சமூகம்பாவம் என்றுசொன்னதை விடாப்பிடியாய்ப்பிடித்துக் காதலனைக் கலங்க அடித்தவள் பாவமே செய்யாதவளா? அவள் ஆடு மாடு மேய்க்க வேண்டியவள் இப்படி படித்தது பாவமல்லவா? அவளைவிட உயர்ந்த சாதிக்காரியாகிய தங்கம்மாவைவேலை வாங்கலாமா? சமூகம் இவைகளெல்லாம் பாவம் என்றுதான் சொல்லுகிறது...! இப்படி நினைத்திருப்பாள் தங்கம்மா, அதனால்தான் சிரித்து விட்டாள்.

தங்கம்மா ஏன் அழுதாள்......? அது பயங்கரத் தொடர்கதை சமூகத்தின் கண்களில் அவள் ஒருபாவி, பஞ்சமா பாதகி......அது எப்படி? அதை அவள் சொல்லவிரும்பவில்லை பாக்கியத்தின் வார்த்தைகள் அவளது வாழ்க்கை ஏடுகளையெல்லாம் புரட்டி அந்த பாவக்கறையேறிய ஏட்டை எடுத்து வைத்துவிட்டன, அதனால்தான் அழுதாள்! அந்த துயரச்செய்தியை என்றைக்காவது ஒருநாள் பாக்கியத்திடம் சொல்லி அழவேண்டும் என்று எண்ணிக் கொண்டு, ஆனால் அதற்கேற்ற வாய்ப்பு கிடைக்கவில்லை பாக்கியம் நேரடியாகக் கேட்டுப் சொல்லவில்லை.

"அம்மா......நீங்கள் எங்கிருந்தாலும் அங்குதான் நானிருப்பேன். நான் வருகிறேன்." என்றாள்.

பாக்கியம் அவளைக் கட்டிக் கொண்டாள். அவளுக்கு அவ்வளவு மகிழ்ச்சி......தங்கம்மாவிடம் அவ்வளவு அன்பு! அவளிடம் வந்து சேர்ந்தது மூன்றாண்டுகளுக்கு முன்னால்தான...அன்றிலிருந்து தனது தாயைப்போலவே பாவித்து நடந்துவந்தாள். அவளும் தன் மகளாகவே எண்ணி அன்பு வடிவாகவே அவள் கண்களின் முன் நடந்துவந்தாள்! சிற்சில சமயங்களில் அவளைப் பற்றி விசாரிக்க ஆரம்பித்தாள். ஆனால், அவள் எதையும் சொல்லவில்லை. சமயங்களில், வெப்பமான கண்ணீர்ச் சொட்டுகளையே பதிலாக்கி வந்தாள். ஆகவே அவளை அழவைக்கக் கூடாதென்பதற்காகவே அவளது முன்னாள் வாழ்வைப்பற்றிக் கேட்பதில்லை.

(தொடரும்)

Edited Printed & Published by C. N. Annadurai M. A. at "Dravidanadu" Press,
105, Tirukkachinambi Street, Kancheepuram.